முதியோர் பதிப்பு

என் இ சி எஃப்

மலேசியா





# என்னில் நிலைத்திரு

யோவான் 15:4

40 நாள் உபவாச ஜெபம் 07.08 - 15.09.2015



# என்னில் நிலைத்திரு

யோவான் 15

1. நான் மெய்யான திராட்சைச்செடி, என் பிதா திராட்சைத் தோட்டக்காரர்.

2. என்னில் கனிகொடாதிருக்கிற கொடி எதுவோ அதை அவர் அறுத்துப்போடுகிறார்; கனிகொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி, அதைச் சுத்தம்பண்ணுகிறார்.

3. நான் உங்களுக்குச் சொன்ன உபதேசத்தினாலே நீங்கள் இப்பொழுதே சுத்தமாயிருக்கிறீர்கள்.

4. என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்; கொடியானது திராட்சைச்செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய்க் கனிகொடுக்கமாட்டாததுபோல, நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால், கனிகொடுக்கமாட்டீர்கள்.

5. நானே திராட்சைச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது.

6. ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால், வெளியே எறியுண்ட கொடியைப்போல அவன் எறியுண்டு உலர்ந்து போவான்; அப்படிப்பட்டவைகளைச் சேர்த்து, அக்கினியிலே போடுகிறார்கள்; அவைகள் எரிந்துபோம்.

7. நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்.

8. நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷராயிருப்பீர்கள்.

9. பிதா என்னில் அன்பாயிருக்கிறதுபோல நானும் உங்களில் அன்பாயிருக்கிறேன்; என்னுடைய அன்பிலே நிலைத்திருங்கள்.

10. நான் என் பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு அவருடைய அன்பிலே நிலைத்திருக்கிறது போல, நீங்களும் என் கற்பனைகளைக் கைக்கொண்டிருந்தால், என்னுடைய அன்பிலே நிலைத்திருப்பீர்கள்.

11. என்னுடைய சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்கும்படிக்கும், உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படிக்கும், இவைகளை உங்களுக்குச் சொன்னேன்.



# என்னில் நிலைத்திரு

கனம் முனைவர் இயூ ஹோங் செங் என்.இ.சி.எஃப் தலைவர்

யோவான் 15:5.நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது என்று இயேசு சீடர்களுக்கு கற்றுக்கொடுக்கிறார்.

நிலைத்திரு என்றால் வாழு, தொடரு அல்லது சார்ந்திரு என்று பொருள்படும். ஆக கிறிஸ்துவுக்குள் நிலைத்திரு என்றால் அவருக்குள் ஜீவி அல்லது அவரில் சார்ந்திரு என்பதாகும்.அனைத்து விசுவாசிகளும் சபையும் அவர் ஒருவருக்கே மகிமை கொண்டுவரும்படிக்கு பிரசன்ன-வழிநடத்துதலில் இருக்கவேண்டும். கிறிஸ்து வுக்குள் நிலைத்திருக்காமலேயே நம்மில் பலர் நன்றாகத்தான் இருக்கிறார்கள். சிலர் அவரில் நிலைத்திராத நிலையைக்குறித்து மறந்தும், மற்றும் சிலர் கிறிஸ்துவுக்குள் வாழுகிற அல்லது அவரில்லாமல் வாழுகிற வேறுபாட்டை அறியாமலும் பொருட்படுத்தாமலும் இருக்கின்றனர்.

*நானே திராட்சைச்செடி,*
*நீங்கள் கொடிகள்.*
*ஒருவன் என்னிலும்*
*நான் அவனிலும் நிலைத்திருந்தால்,*
*அவன் மிகுந்த கனிகளைக்*
*கொடுப்பான்;*
*என்னையல்லாமல் உங்களால்*
*ஒன்றும் செய்யக்கூடாது*

கனிகளைக் கொடுப்பதை விடுத்து நெடுங்காலமாக தங்கள் சொந்த அளவில் அடைந்த வெற்றியினால் சிதைந்த நிலைக்கு திருச்சபை இடங்கொடுத்துள்ளது. சபை எண்ணிக்கை (கட்டிடங்கள்) அளவைக் கொண்டு நம் வெற்றியின் நம்பிக்கை அமைந்துவிட்டதேயன்றி சீஷர்களைப்பெருக்கி வெளியே அனுப்புவதில் தவறி விட்டோம். கிறிஸ்தவ அனுபவங்களைப் பெற்றிராமல் சபைகளின் அனுபவங்களினால் நாம் நிரம்பப்பெற்றிருக்கிறோம்.

தீர்க்கதரிசன வார்த்தைகளைக்கொண்டு தேசத்தில் பறைசாற்றாமல் போனோம்.தேவனுக்கு சுகந்தவர்க்கத்தை காட்டாமல் துதிகள் செலுத்திக்கொண்டிருக்கிறோம்.அநேக காரியங்களுக்கு பரிதபிக்கிற நாம் தேவனுடைய வீட்டைக்குறித்ததான பக்தி வைராக்கியத்தை இழந்து போனோம்.பணிபுரியும் குழுக்களும் வழிமுறைகளும் நிறையவே பக்தியுள்ளவர்களின் பங்கினை மேற்கொண்டிருக்கின்றன.

தேவ பிள்ளைகளானதால் கல்வி மேம்பாட்டில் அதிக கவனம் செலுத்தி, ஊழியங்கள் தாலந்து நிறம்பினவைகளாயும் சபைகள் நிகழ்வுகளினால் நிர்வாகம் பண்ணுகிற நிலையாகவும் மாறிக்கொண்டிருக்கிறது. செடியில் இணைந்திருக்கிறதினால் வருகிற பரிசுத்த ஆவியின் தொடுதலுக்கு கனம் கொடுக்கப்படுவதில்லை.



நிலைத்திரு எனும் சொல்லுக்கு சார்ந்திரு எனும் பதமும் பயன்பாட்டில் உண்டு. செடியில் நிலைத்திருக்கிற கொடிகளே கனி தரும். (செடியிலிருந்து கொண்டு செல்லப்படும் தாது மற்றும் ஊட்டப்பொருள்கள் கொடிகளை சென்று அடையாவிட்டால், கொடிகள் உயிர்வாழாது).

நண்பர்களே, தேவனுடன் நாம் அசாதாரண நன் அறிமுகத்திற்கு படைக்கப்படவில்லை. அவருடன் ஒரு நெருங்கிய உறவில் வளருவதற்கே சிருஷ்டிக்கப்பட்டோம். எவ்வளவு பணிகள் இருந்தாலும், அவருடன் தொடர்பாக இருக்கும் பழக்கத்தை நேரம் தேடி ஏற்படுத்திக்கொண்டால் மாத்திரமே அது சாத்தியப்படும்.

தேவனுடைய கால அட்டவணையின் இறுதியை நெருங்கிக்கொண்டிருக்கிற வேளையில், முன்பை விட இன்னும் உத்வேகத்துடனும் தெளிவுடனும் தீர்க்கதரிசனத்துடனும் செயல்பட வேண்டும். அந்திக்கிறிஸ்துவின் எழும்புதலுக்கு எதிராக போர் தொடுக்கிற நாம், நமது வாழ்க்கையில் எந்நாளும் உற்சாகமும் பெலனும் பெற்றவர்களாய் திகழ்வதற்கு பரிசுத்த ஆவியின் தொடர்ச்சியான நிறைவுதலில் நிரம்ப வேண்டும்.

*என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது*

இயேசுவில் நிலைத்திருப்பது என்பது குறுகிய தூர ஓட்டம் அல்ல. அது ஜீவிய கால நம்பிக்கை, சார்ந்திருத்தல் மற்றும் நம்புகிற ஒரு ஒப்புக்கொடுத்தலாகும். அநேகர் தங்கள் ஜீவியத்தில் கனி காணமுடியாத காரணம் அந்த ஓட்டத்தில் நிலைத்திருக்க முடியாததே.

இன்றைய நாட்களில் சிக்கலும் சவாலும் எதிர்நோக்கிக்கொண்டிருக்கும் சபைகள் என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது எனும் இயேசுவினுடைய உண்மை வார்த்தையை உயர்த்திப்பிடிக்க வேண்டும்.

தேவனுடைய வாக்குத்தத்தத்தை பிடித்துக்கொண்டு ஜெயமும் கனிகளை கொடுக்கும் ஸ்தானத்தையும் நம்மால் எட்டிப்பிடிக்க முடியும் ஏனெனில் ஒருவனில் கிறிஸ்துவும் அவருக்குள் அவனும் நிலைத்திருந்தால் மிகுந்த கனிகளைக் கொடுக்க முடியும்.



# அறிமுகம்

***ஜெப கமிஷன் (பதிப்பகத்தார்)***

ஜெபமானது நமது வாழ்க்கையில் முக்கியமானதும் தேவன் நமக்கு வைத்திருக்கிற சித்தம் அனைத்தையும் திறக்கக்கூடிய திறவுகோலையும் கொண்டிருக்கிறது.நமது ஜீவியத்தையும் தேசத்தையும் இலக்கையும் மாற்ற வல்லது ஜெபம். எனினும் எல்லாருமே இதன் பயனை முழு அளவில் அனுபவித்தார் இல்லை.

திராட்சை செடியின் உவமையில், கனியுள்ள ஜெப வாழ்க்கையில் அடையக்கூடிய மற்றும் அது கொண்டு வரக் கூடிய பலனைக்குறித்து நமது கர்த்தர் உரைக்கிறார். நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோஅது உங்களுக்குச் செய்யப்படும்.நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷராயிருப்பீர்கள். யோவான் 15:7-8).

கனியுள்ள ஜெப ஜீவியம், கிறிஸ்துவில் நிலைத்திருப்பதினால் மாத்திரமே என்பது இதை விடத் தெளிவாக எங்கும் குறிப்பிடமுடியாது.இதனை நாம் கவனத்தில் கொண்டு அதன்படி ஜீவிக்க வேண்டும். ஏனெனில் நமது ஜெபம் கேட்கப்பட்டு நமது கைகளின் பிரயாசம் செழிப்பாகி இவ்வுலகத்திற்கு நாம் அவருடைய சீடர்கள் என்பதை எடுத்து ணர்த்துகிறது. மேலும் முக்கியமாக இது தேவனுக்கு மகிமையைக் கொண்டு வருகிறது. இயேசுவின் சீடர்களாகிய நாம் நமது எஜமானனைப்போல கனிதரும் விண்ணப்பமாக ஜெபமாக ஜெபிக்க வேண்டும்.

இந்த 40 நாள்கள் உபவாச ஜெபத்தில் தேசத்திற்காக வேண்டிக்கொள்ள நாம் காலடி எடுத்து வைக்கும்போது நாம் அவருக்குள் நிலைத்திருப்பதை நடைமுறைப்படுத்து வோம். இந்த ஜெப கையேட்டில் கிறிஸ்துவுக்குள் நிலைத்திருப்பதையும் எப்படி அதனை நடப்பிப்பது என்றும் அனுதினமும் பிரதிபலிக்கும்.நிலைத்திருப்பதின் ஒழுங்கை அனுபவமாக்கிக்கொண்ட ஸ்தல சபைத்தலைவர்களாலே இவை எழுதப்பட்டன.நீங்கள் எங்களோடு பயணிக்கும்போது, நீங்கள் உந்தப்பட்டு, அவருடன் நடப்பதில் இன்னும் ஆழமாகவும் அணுக்கமாகவும் தோண்டும்பொழுது, உங்கள் ஜீவியத்தில் அவர் மகத்துவமாய் அசைவாடுவதைக் காண்பீர்கள்.



# என்.இ.சி.எஃப் 40 நாள் உபவாச ஜெபம்

என்.இ.சி.எஃப் 40 நாள் உபவாச ஜெபம் 2001ல் துவக்கப்பட்டு இதுவரை வெளிவந்துகொண்டிருக்கிறது. நமது தேசத்திற்காக உபவாசித்து ஜெபிக்கும் இயக்கத்தை திருச்சபைகளுக்கு 15 ஆண்டுகளாக இந்தக்கையேடு வழி வழங்கிவருகிறது. என்.இ.சி.எஃப் உறுப்பிய சபைகளின் விசுவாசிகளும், மற்ற கிறிஸ்துவ குழுவினரும் பங்கெடுக்கும் ஒரு வருடாந்திர நிகழ்வாக இது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

90வது ஆண்டுகளில் அர்ஜெண்டினாவில் ஏற்பட்ட எழுப்புதலை வேராகக் கொண்டது இந்த துவக்கம். மலேசியாவிலும் இந்த எழுப்புதல் அலையை வாஞ்சித்து, கார்லோஸ் அனக்கொண்டியா எனும் பிரசித்தி பெற்ற எழுப்புதல் பிரசங்கி அழைக்கப்பட்டு 2000வது ஆண்டில் ஊடுருவி மேற்கொள்ளும் மாநாட்டில் பேசினார். மலேசியாவிற்காக உபவாசித்து ஜபிக்கும் ஒரு தீப்பொறி அங்கிருந்து ஆரம்பிக்கப்பட்டு வருடந்தோறும் 40 நாள் உபவாச ஜெப இயக்கமாக செயல்வடிவம் பெற்றது.

என்.இ.சி.எஃப் 1982ல் தொடங்கினதிலிருந்து என்.இ.சி.எஃப் நிறைய மாற்றங்களை கடந்து சென்றாலும் அதின் செயல்திட்டமும் நோக்கமும் மாறாமல் இருந்தது.மலேசியாவின் இவாஞ்சலிக்கல் திருச்சபைகள் சிக்கல்களை சந்திக்கும்போது ஒருமித்த குரலாக அரசாங்கத்திடம் குரல் எழுப்பும். பல்வகை சேவைகளின் வழி ஸ்தல சபைகள் ஐக்கிய தடங்களை வழங்குவதில் உதவி புரியும். ஸ்தல சபைகளின் பிரதிநிதி எனும் அடிப்படையில் அவை எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தற்போதைய விவகாரங்கள் என்னவென்பதை விவரிக்கவும், தகுந்த வியூகங்களோடு மறுமொழிகொடுக்கவும் ஆலோசனை கொடுக்கும், ஜெபம் உட்பட. அண்மைய காலங்களில் தேசிய மேம்பாட்டில் பொது விவகாரங்களில் என்.இ.சி.எஃப் ஈடுபாடு காட்டி வருகிறது.

**என்.இ.சி.எஃப் காக ஜெபியுங்கள்**

- தேசிய மேம்பாட்டில் மலேசிய திருச்சபைகள் உற்சாகமாக இணைந்து பங்காற்ற வேண்டும் எனும் என்.இ.சி.எஃப்ன் தரிசனம் நிறைவேற ஜெபியுங்கள்.
- சபைகளுக்குள் காணப்படும் ஐக்கியத்தின் இணைப்பு இன்னும் பலப்பட ஜெபியுங்கள். தேசிய கட்டுமானத்தில் சாட்சிகளாகவும், உத்வேக நிலையில் ஏற்புடையவர்களாகவும் தொடர்ந்து ஸ்தல சபைகள் நிலைத்திருக்க
- மலேசிய திருச்சபைகள் எதிர்கொள்ளும் பல்வேறு சவால்களை சந்திக்க என்.இ.சி.எஃப் ன் உயர்நிர்வாக இயக்குனர்களுக்கு ஞானத்தையும்வியூகத்தையும் அருள ஜெபியுங்கள்.
- என்.இ.சி.எஃப் செயல் நிர்வாகம்தொடர்ந்து அதே தரிசனத்துடன் மலேசிய திருச்சபைகளுக்கு சேவை செய்ய பலமும் அநுக்கிரகமும் பெற ஜெபியுங்கள்.

# உபவாசிக்க அழைப்பு

இப்போதைய உபவாச ஜெப காலத்தில் தேவனிடத்தில் முழுமனதோடு திரும்ப நமது இருதயத்தை மென்மையாக்குவோம். அவருடைய சரீரமாகிய மலேசிய திருச்சபைகள், ஒன்றுசேர்ந்து மலேசிய தேசத்திற்காக, அவருடைய நோக்கமும் சித்தமும் வருங்காலத்தில் தேவ சர்வவல்லமையில் ஒருநிலைப்பட அவரிடத்தில் மன்றாடுவோம்.

நமது தேசமாகிய மலேசியா, நமது தனிப்பட்ட வாழ்க்கை, நமது குடும்பங்கள், நமது சமுதாயங்கள் இவற்றிற்கு தேவன் என்ன சொல்ல விரும்புகிறார் என்பதை தெளிவாக விளங்கிக்கொள்கிறதற்கு நம்முடைய ஆவிக்குரிய உணர்வுகளை தேவன் கூர்மையாக்கத்தக்க தேவனிடம் நமது பசிதாகம் அதிகரிக்கச்செய்ய இந்த உபவாசத்தின் நோக்கமாக இருக்கிறது.

**எப்படி உபவாசத்தை துவங்குவது**

## How to begin the fast

- உனது குறிக்கோளை வரைந்துகொள் அது தான் உன் உபவாசத்திற்குக் காரணம்
- தேவனின் ஏவுதலின்படி 40 நாள் உபவாசத்திற்கு ஒப்புவி
- அறிக்கையிடாத பாவங்களை உன் இருதயத்தில் ஆராய்ந்து ஆவியில் ஆயத்தப்படு சரீரவிதத்தில் ஆயத்தப்படு
- சிறு அளவு ஆகாரத்துடன் உன் உபவாசத்தை முடித்துக்கொள்

உபவாசித்து ஜெபிக்கும்போது மற்ற புத்தாக்கங்களை சேர்த்துக்கொள்

**உபவாச வகைகள்**

*முழு உபவாசம்:* தண்ணீரும் பானமும். பலமான உணவு அல்ல

*ஒரு நேர உணவு:* ஒரு தியாகம்

*தானியேல் உபவாசம் :* மாமிசம் தவிர்த்து பழவகைகள்

*மறுப்பு உபவாசம்:* உனக்கு மிகவும் பிரியமானதை ஒதுக்குதல் (தேநீர், விளையாட்டு, அரட்டை, சாக்லட்)

*ஊடக உபவாசம்:* அனைத்து தகவல் மற்றும் கேளிக்கைகளை ஒதுக்கு

## ஆலோசனைகள்:

**உன் குடும்பத்துடன்:** ஒரு குடும்ப பலிபீடத்தை அமைத்து, அனைத்து உறுப்பினர்களுக்கும் ஏற்ற உபவாசத்தில் ஈடுபட்டு. தினமும் ஒன்று கூடி உபவாச கையேட்டை தியானி.

**உனது ஜீவியக்குழுவில்:** ஒரு உபவாச வகையை தெரிவு செய்து, ஜெப நேர ஒதுக்கீடு செய்து அட்டவணையை பின்பற்றி அனுதினம் ஜெபி.

**உன் அலுவலகத்தில்:** மற்ற கிறிஸ்தவ நண்பர்களை உபவாசிக்க சொல்லி தேநீர்/உணவு வேளைகளில் ஒன்று சேர்ந்து ஜெபி.

**ஊடக சாதன வழி:** காணொளி, வாட்ஸ்செப், ஸ்கைப் வழி ஜெபி

**கொடு**

உணவு பணத்தை சேகரித்து என்.இ.சி.எஃப் கிழக்கு மலேசிய மேம்பாட்டின் தர்ம நிதிக்கு அனுப்பவும் (எசா 58:6-9)

# 40 நாள் ஜாமக்கார மற்றும் 24/7 ஜெபம்

ஏசாயா 62:6-8ல் எருசலேமே, உன் மதில்களின்மேல் பகல்முழுதும், இராமுழுதும் ஒருக்காலும் மவுனமாயிராத ஜாமக்காரரைக் கட்டளையிடுகிறேன். கர்த்தரைப் பிரஸ்தாபம்பண்ணுகிறவர்களே, நீங்கள் அமரிக்கையாயிருக்கலாகாது. அவர் எருசலேமை ஸ்திரப்படுத்தி, பூமியிலே அதைப் புகழ்ச்சியாக்கும் வரைக்கும் அவரை அமர்ந்திருக்க விடாதிருங்கள் என்ற தீர்க்கதரிசியின் வார்த்தைகளின் உதாரணங்கள் வேத வசனத்தில் சபை சரித்திரம் முழுதும் காணப்படுகிறது.

சபையின் தோன்றல் எருசலேமில் ஒரு அறையில், ஜாமக்கார நிலையில் காத்திருந்து ஜெபித்து க்கொண்டிருந்தபோது நடந்தது என அப்போஸ்தலரில் சொல்லப்பட்டுள்ளது அப் 1:14ன்படி அங்கே இவர்களெல்லாரும், ஒருமனப்பட்டு, ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திருந்தார்கள்.துவக்க காலத்தில் ஜெப மடத்து மையங்கள், வட ஐரோப்பாவின் செல்டிக் சமூகங்கள், பெனெடிக்டைன் போன்ற அமைபுகள் கிறிஸ்தவத்தை அடைகாத்து வந்தனர்.

18ஆம் நூற்றாண்டுகளில் மொரேவியன் சமூகத்தினர் இரவும் பகலும் 100 ஆண்டுகளுக்கு மேலாக உத்தமத்தோடு ஜெபித்து வந்ததின் அடிப்படையில் மகத்தான மிஷனரி புரட்சி இயக்கம் தோன்றியது. அதில் ஒருவர்தான் மெதடிஸ்ட்சபை ஸ்தாபகரான ஜோன் வெஸ்லி.

20ஆம் ஆண்டுகளில் 24/7 ஜெப அசைவு லோஸ் ஏஞ்சல்ஸ் அசூசா சாலையில் துவங்கி பெருமளவு எழும்பின எழுப்புதலின் எதிரொலியாக இன்றும் அகிலத்தைத்தாண்டி தொடருகிறதை உலகமே காணுகிறது.

24/7 ஜெப அலையானது இன்று உலகளவில் விரிவாக ஓங்கி ஜெப அசைவின் மேம்பாடாக பீடுநடை போடுகிறது. இடைவிடாத 24 மணிநேர மன்றாட்டுகள் பூமியெங்கும் ஏறெடுக்கப்பட்டு, இயேசுவானவர் திரும்ப வருவதற்கு முன் வரலாற்றில் இல்லாத பெரிய அறுவடை நடப்பதற்கு ஆயத்தமாக ஒரு விடுதலையின் ஜெபம் நடந்துகொண்டிருக்கிறது.

தேசத்தையும் சபைகளையும் அண்மையில் உலுக்கிக்கொண்டிருக்கிற பெருமளவான மிரட்டல்களும் பேரிடர்களும், மலேசியத் திருச்சபைகள் கைகோர்த்து 24 மணி நேர ஜாமக்கார ஜெபத்தில் தரித்திருக்க அழைக்கப்படுகிறார்கள்.

இதனை கவனத்தில் கொண்டு, 40 நாள் உபவாச ஜெபத்தோடு கூட 24 மணிநேர ஜாமக்கார ஜெபத்தில் மலேசியாவிற்காக மன்றாடும்படி சபைகள் ஏற்பாடுகளை செய்யுங்கள்.முழுநாளும் (24 மணி) மன்றாட்டு ஜெபத்தில் சபைகள் தரித்திருக்க அல்லது சில சபைகள் சேர்ந்து ஒரு வார கால இடைவிடா மன்றாட்டை ஏறெடுக்க ஆலோசியுங்கள். மலேசியாவில் தேவ பிள்ளைகள் இந்த உபவாச ஜெப காலம் வரை ஒரு மணிநேரம்கூட இடைவெளி இல்லாமல் மன்றாட்டில் அமிழ்ந்து போகத்தக்கதாக களத்தில் இறங்குங்கள்.

நாள் 1

# திராட்சைச்செடியில் நிலைத்திருங்கள் இயேசுவே மெய்யான திராட்சைச் செடி

இஸ்ரேல் தேவனுடைய திராட்சைத்தோட்டமாக உருவகப்படுத்தப்பட்டது (ஏசா5:7). எதிர்பாராதவிதமாக இஸ்ரேல் தங்களுடைய உடன்படிக்கையை தேவனுக்கு எதிராக சோரம்போக்கினதினால் எதிர்மறையான மறைபொருளாக சாயம்பூசப்பட்டிருக்கிறது.

**மெய்யான** திராட்சைச்செடியாக தம்மை கூறின இயேசு (யோவான் 15:1), தம்மையே மறு அச்சாக மாற்றிக்கொள்வதோடு மாத்திரமல்ல பழைய ஏற்பாட்டில் துரோகம் செய்த இஸ்ரவேலரை விட்டும் தம்மை தூரப்படுத்திக்கொள்கிறார். மெய்யான திராட்சைச் செடியாக இருக்கிற இயேசு உண்மையான கிழ்ப்படிதலுள்ளவர் என்பதை சிறந்த முன்னுதாரணமாக வெளிப்படுத்துகிறார். **அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்.(பிலி 2:8)**

லூக்கா 3:22ல் நீர் என்னுடைய நேசகுமாரன், உம்மில் பிரியமாயிருக்கிறேன் என்று பிதாவானவர் உரைக்கிறார். ஏன் இவ்விதமான உறுதி பிதாவானவரிடத்திலிருந்து வருகிறது? **ஏனெனில் இயேசுவானவர் எந்தவொரு கேள்வி முறையின்றி பிதாவுக்கு முழு கீழ்ப்படிதலுள்ளவராய் இருந்தார்.**

அதுபோல பரமபிதாவுக்கு பிரியமுண்டாக இயேசுவை முன்மாதிரியாகக்கொண்டு அவருடைய சிந்தையுள்ளவர்களாயிருந்து கீழ்ப்படியவேண்டும் பிலி 2:5. **மெய்யான திராட்சை செடியில் நிலைத்திருக்கிற நாம் மென்மேலும் கீழ்ப்படிதலுள்ளவர்களாக இருக்கிறோமா?**

## தேசத்திற்காக ஜெபியுங்கள் - சிலாங்கூர்

- **மாநில அரசு:**

அ) மந்திரிபெசார், அனைத்து அரசு அதிகாரிகள்-வெளிப்படை, நேர்மை, நடுநிலை.
(ஆ). அனைத்து கொள்கைகளிலும் விவேகம், போட்டி ஆற்றல்; (இ). விவேக நிர்வாகம், நல்ல உக்கிராணத்துவம், (ஈ). பொதுமக்கள் நலனில் முக்கியத்துவம்; (உ). ஏழ்மை துடைத்தொழிப்புக்குபாடுபடுதல்; (ஊ) எளியவர்கள் மற்றும் சுற்றுச்சூழலைப் பாதிக்காத மேம்பாட்டுத் திட்டங்கள்; (எ) ஊழல் அதிகாரிகளை நீக்கம் செய்தல்.

- ஓராங் அஸ்லி மக்களை நல்ல விதத்தில் நடத்தி அந்தஸ்தை நிலைநிறுத்தல்.
- சபை –(அ). ஒற்றுமை கிறிஸ்துவ இராஜ்ஜியத்தை மையமாகக்கொண்டிருத்தல் (ஆ). சபைகளை பாதிக்கும் சவால்களை எதிர்கொள்ள விவேகம் (இ). சமூகங்களை பாதிக்கும் விவகாரங்களை எதிர்த்து தீவிர ஈடுபாடு, தேவனுக்காக சிறத்தல், நகர்ப்புறங்களில் காட்டவேண்டிய கரிசனை

நாள் 2

# திராட்சைச்செடியில் நிலைத்திருங்கள் மெய்யான திராட்சைச் செடியில் நிலைத்திருங்கள்

யோவான் 15:1ல் செடிக்கும் கொடிக்குமுள்ள உறுதியான தொடர்பை இயேசு சித்தரிக்கிறார். அவருடன் உறவு கொள்ளும் ஓர் உண்மையான ஜீவனுள்ள பந்தம் இயேசுவுடன் தனிப்பட்ட நெருக்கமான உறவில் வழிநடத்தும்.

இயேசுவில் நிலைத்திருக்கும்போது அவரில் சார்ந்திருக்கிற ஓர் உறவுக்குள் அழக்கிறார் யோவான் 15:4-7). சக்தி முடிந்த பிறகு மறுபடியும் ஏற்றிக்கொள்ளும் பேட்டரி அல்ல கிறிஸ்தவ ஜீவியம் மாறாக மின்சாரத்தில் இணைந்து தொடர்ச்சியான ஒரு சக்தி கிடைக்கப்பெறுவதே அது என ஓர் எழுத்தாளர் விவரிக்கிறார்.

மறுபடியும் பிறந்த விசுவாசி செடியில் எப்பொழுதும் நிலைத்திருக்கிற கொடியாக இருக்கவேண்டியதையே இயேசுவானவர் விரும்புகிறார்.இயேசுவில் நிலைத்திருக்கும்போது அனுதினமும் நாம் ஆவிக்குரிய வல்லமை பெற்று ஆவிக்குரிய வாழ்க்கையிலும் வளர்த்தியிலும் நாம் போஷாக்கு பெறுவோம். **இயேசுவின் கட்டளைகளில் கீழ்ப்படிந்து அவருடைய உறவில் நிலைத்திருப்பதற்கு நாம் எவ்வளவு தீவிரம் காட்டுகிறோம்?**

### தேசத்திற்காக ஜெபியுங்கள் - நெகிரி செம்பிலான்

- **மாநில அரசு:** ஞானம் நேர்மை, ஊழலற்ற ஆட்சி, பொது மக்கள் நலனில் முக்கியத்துவம், மாநில நிதிநிர்வாகத்தில் நல்ல பொறுப்பு, சமய நல்லிணக்க சுதந்திரத்தை பேணுதல், பட்சபாதமில்லாமல் நியாயத்துடன் நடந்துகொள்ள அனைத்து அரசு திட்டங்களிலும் நிதி நிர்வாகம் திறம்பட நிர்வகிக்கப்பட.
- பொருளாதார குறைவின்மை, பொருளாதார மேம்பாடுகள் குறிப்பாக, வேளாண்மை, விவசாய மற்றும் மீன் பிடிப்பு துறைகளில்.
- சபை:

(அ). ஒற்றுமை, தரிசனம், இயேசுவுக்காக வைராக்கியம், தொலைந்த ஆத்துமாக்கள் நிமித்தம் கரிசனை;
(ஆ). அதிக அர்ப்பணிப்புள்ள தலைவர்கள், முழுநேர ஊழியர்கள் அவர்கள் தேவைகள் சந்திக்கப்பட;
(இ). பலனுள்ள பள்ளி வளாக ஊழியங்கள், குறிப்பாக வெளிநாட்டு மாணவர்கள்;
(ஈ). இளம் கிறிஸ்தவ கல்விமான்கள் தங்கள் தாயகத்திற்குத் திரும்பி ஸ்தல திருச்சபைகளின் மற்றும் தங்கள் மாநிலத்தின் நலத்திற்கு பங்களிப்பு செய்ய.

# நாள் 3

# திராட்சைச்செடியில் நிலைத்திருங்கள் என் பிதா திராட்சை தோட்டக்காரர்

யோவான் 15:1ல் இயேசு தம்மை மெய்யான திராட்சைச்செடி என்று மாத்திரமல்ல, தம் பிதா திராட்சைத்தோட்டக்காரர் எனவும் குறிப்பிடுகிறார். திராட்சைத்தோட்டம் நல்ல ஆரோக்கியமான, செழிப்பான பலன்கொடுக்கத்தக்கதாக காணப்படும்படிக்கு அதின் கிளைகளை விவசாயி நறுக்குகிறார் (யோவான்15:2).

கிளை நறுக்கப்படுதல் ஒரு வலியுள்ள செயல்பாடாக இருப்பினும் சுத்திகரிப்பு என்பது ஒரு முக்கிய அங்கமாக நம்மை நேசிக்கும் ஆவிக்குரிய பரமபிதா திராட்சைத்தோட்டக்காரராக இருந்து நமக்காக நடப்பிக்கிறார். அறுவைச்சிகிட்சை நிபுணர் புற்றுநோய் வியாதியஸ்தரை காப்பாற்ற வேண்டி கெட்டுப்போன ஒரு உறுப்பின் பகுதியை வெட்டியெடுக்கிறதுபோல நமது பிதா ஆவிக்குரிய வளர்ச்சிக்கும் பலன் கொடுத்தலுக்கும் தடைகளாக காணப்படும் செத்துப்போன கிளையாகிய நமது குணநலனை வெட்டியெடுக்கிறார். எபிரெயர் 12:9-10- **அன்றியும், நம்முடைய சரீரத்தின் தகப்பன்மார்கள் நம்மைச் சிட்சிக்கும்போது, அவர்களுக்கு நாம் அஞ்சி நடந்திருக்க, நாம் பிழைக்கத்தக்கதாக ஆவிகளின் பிதாவுக்கு வெகு அதிகமாய் அடங்கி நடக்கவேண்டுமல்லவா? அவர்கள் தங்களுக்கு நலமென்று தோன்றினபடி கொஞ்சக்காலம் சிட்சித்தார்கள்; இவரோ தம்முடைய பரிசுத்தத்து க்கு நாம் பங்குள்ளவர்களாகும்பொருட்டு நம்முடைய பிரயோஜனத்துக்காகவே நம்மைச் சிட்சிக்கிறார்.**

நமது பரமபிதாவின் இந்த கிளை நறுக்கும் பணியின் நோக்கமென்ன? யோவான் 15:8ல் சொன்னபடி நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷராயிருப்பீர்கள் என்பதற்கே. **கனிகொடுப்பதில் உன்னத நிலையை அடையும்போது தேவன் மகிமைப்படுவார் என நீங்களும் நானும் அறிந்திருக்கிறோமா?**

### தேசத்திற்காக ஜெபியுங்கள் - மலாக்கா

- மாநில அரசு மற்றும் மாவட்ட ஆட்சி – நற்சாட்சி பெற்ற நேர்மை மிக்க உறுப்பினர்கள்- சொந்த நலனுக்குமேல் பொது மக்கள் நலத்தை வைத்து ஆட்சியில் நீடித்திருக்க; அவர்களின் இருதயமும் செவிகளும் தேவ ஆலோசனையைக்கேட்டு தேவ பார்வையில் சரியானதைச்செய்ய
- மக்களின் நலனில் அக்கறைக்கொண்ட முதலமைச்சர் மற்றும் ஆட்சிக்குழு உறுப்பினர்கள்.
- சபை – (அ). **புதிதாக்கப்பட்ட தரிசனம் மற்றும் ஒற்றுமையுடன் அவருடைய சபைகள் விசுவாசிகள் எழும்ப. (ஆ). நற்செய்தி பரப்ப, அவருடைய வல்லமை வெளிப்பட நம்பிக்கை, தைரியம், உணர்வு கொண்டு அநேகருடைய இரட்சிப்புக்காக உழைக்கும் புதிதாக்கப்பட்ட கரிசனையுடன் விசுவாசிகள் எழும்ப (இ). மிஷன் பள்ளிகள்- தெய்வீக முதல்வர்கள், நல்ல ஆசிரியர்கள், கிறிஸ்தவ ஐக்கியங்கள் நடத்த சுதந்திரம் இவை நடந்தேற.**

நாள் 4

# நாம் கொடிகள், அவர் திராட்சை செடி

**என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்; கொடியானது திராட்சச்செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய்க் கனிகொடுக்கமாட்டாததுபோல, நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால், கனிகொடுக்கமாட்டீர்கள். நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள்.ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத் திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது. (யோவான் 15:4-5)**

நாம் கொடிகளும் இயேசு செடியுமாய் இருக்கிறோமென இந்த வசனங்கள் நினைவு படுத்துகின்றன. கொடியானது செழிப்பாகவும் கனிதருபவையாயும் இருப்பதற்கு, செடியுடன் இணைந்து அதிலிருந்து போஷாக்கு கிடக்கும்படியாக இருத்தல் அவசியம்.மண்ணானது செழிப்பற்று, தண்ணீரும் ஆகாரமும் சரிவரக் கிடைக்காமல் இருந்தால் கொடியானது வளர்ச்சியில் பாதிப்படைவது திண்ணம்.

தேவ பிள்ளைகளாகிய நமக்கு போதுமான மற்றும் வற்றாத திராட்சை செடி உண்டு.செடியானது இயேசு கிறிஸ்து. அவர் குறைவற்ற அனைத்தும் முடிக்கிற, முழுமையும் போஷிக்கிறவராயிருந்து சகலவற்றையும் அறிந்த சர்வ வல்லவருமாயிருக்கிறார்.உலகத்தின் அல்லது பரலோகத்தின் எதிர்மறை சூழ்நிலைகளினால் பாதிக்கபடுகிறவராக அவர் இல்லை ஏனெனில் சரீர மற்றும் ஆவிக்குரிய யுகத்திற்கு அவரேஆளுனர்.

எனவே பிதாவானவர், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் நமக்கு அருளும் பரிசுத்த ஆவியின் வல்லமை, தேவ வசனங்கள், ஆவிக்குரிய வரங்கள், அவருடைய ஆலோசனை நமது ஜீவியத்திற்கான வழிநடத்துதல் இவற்றை அலட்சியப்படுத்த வேண்டாம்.

**ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங்கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம் (எபி 4:16).**

**நம் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார் என நாம் உண்மையாகவே நம்புகிறோமா?**

### தேசத்திற்காக ஜெபியுங்கள் - நீதித்துறை தலைவர்

- சத்தியத்துக்கும் நீதிக்கும் அடிபணிந்தவர்
- மக்களின் நீதி நியாயத்திற்கு உழைக்க வேண்டிய தேவ பயம்
- நீதித்துறை தலைவரும் அவருடைய பணியாட்களும் தில்லுமுல்லுகளையும் அழுத்தங்களையும் மனித பயத்தையும் எதிர்க்கும்படியாக

நாள் 5

# கொடி
# சுத்திகரிக்கப்பட்ட ஜீவியம்

**யோசுவா ஜனங்களை நோக்கி: உங்களைப் பரிசுத்தம்பண்ணிக்கொள்ளுங்கள்;**
**நாளைக்குக் கர்த்தர் உங்கள் நடுவிலே அற்புதங்களைச் செய்வார் என்றான்.**
**யோசுவா 3:5**

**ஆகையால் ஒருவன் இவைகளைவிட்டு, தன்னைச் சுத்திகரித்துக்கொண்டால்,**
**அவன் பரிசுத்தமாக்கப்பட்டதும் எஜமானுக்கு உபயோகமானதும்,**
**எந்த நற்கிரியைக்கும் ஆயத்தமாக்கப்பட்டதுமான கனத்துக்குரிய பாத்திரமாயிருப்பான்.**
**2 தீமோ 2:21**

தேவனிடம் திரும்பாத மக்களை தேவன் பயன்படுத்த வேண்டிய அவசியமில்லை.தமது நோக்கத்திற்காக ஒருவனுடைய வாழ்க்கையில் குறிப்பிட்ட காரியத்தை தேவன் செய்ய விரும்புகிறார். அவனுடைய இருதயத்தை பரிசுத்தம், நீதி, தூய்மை இவை அவன் வாழ்க்கையில் காணப்படவும் அவருக்குள் முழுமையாக சுத்திகரிக்கப்படவும் செய்கிறார்.

தேவன் தம் வழியை மக்களில் செயல்படுத்த முடியாத அளவு பாவம் தடை செய்கிறது (சங்66:18). ஆழமான உண்மை மனந்திரும்புதல் வழியாக மாத்திரமே தேவன் அவனைக் கொண்டு ஏதாகிலும் செயல்படுத்த முடியும். இருதயக்கறைகள் மற்றும் கைகளின் அசுத்த கிரியைகளை விலக்கவேண்டுமென்கிறார். இவை நடந்தேறியபின் அளவில்லா விதத்தில் அற்புதங்களை நடத்துகிறார். இந்த வேளையில்தான் செடியிலிருந்து கொடிக்கு (தேவ ஜனம்) எல்லையில்லா ஆசீர்வாதமும் அவருடைய வல்லமையும் பெருக்கெடுத்து ஓடும்.

### தேசத்திற்காக ஜெபியுங்கள் - நீதிபதிகள்

- அரசியல் சாசனத்தை நிலைநிறுத்த நீதிபதிகள் முன்வர
- பாகுபாடின்றி நீதியை நீதிபதிகள் நிலைநாட்ட; அரசியல், பண ஊழலின்றி சட்டத்தின்படியும் நிரூபனங்கள் வழியும் தீர்ப்பு கூற
- தனித்துவ ஊக்கமளிக்கும் தீர்ப்புகள் – இறுதி தீர்ப்பு பிரபல்யமோ இல்லையோ, பாராட்டு பெறுமோ இகழப்படுமோ, அரசியல் சாசன அடிப்படையிலான மற்றும் துணிச்சலான தீர்ப்புகள் நீதிபதிகள் வழங்க

# நாள் 6

# கொடி
# ஜெயமுள்ள ஜீவியம்

**நம்முடைய தேவனாகிய கர்த்தரை நாம் தொழுதுகொள்ளுகிறபோதெல்லாம், அவர் நமக்குச் சமீபமாயிருக்கிறது போல, தேவனை இவ்வளவு சமீபமாய்ப் பெற்றிருக்கிற வேறே பெரிய ஜாதி எது? இந்நாளில் நான் உங்களுக்கு விதிக்கிற இந்த நியாயப்பிரமாணம் முழுமைக்கும் ஒத்த இவ்வளவு நீதியுள்ள கட்டளைகளையும் நியாயங்களையும் பெற்றிருக்கிற வேறே பெரிய ஜாதி எது? (உபாகமம் 4:7-8)**

இயேசுகிறிஸ்து மூலமாய் தேவனை தனித்துவ விதத்தில் அறிந்துகொள்ளவும் அவருடைய பிள்ளைகளாகும் உரிமையையும் பெற்ற பாக்கியவான்கள் நாம்.அவரிடம் எவ்வேளையும் செல்லவும் அப்பா பிதாவே என அழைக்கவும் முடியும்.

தேவ பிள்ளைகளாக இலவசமாய் செடியிலிருந்து ஜீவன் பெற்றுக்கொள்ளவும், தோல்விக்கு அல்ல ஜெயத்திற்கே நாம் முன்குறிக்கப்பட்டும் இருக்கிறோம். இவைகளைக்குறித்து நாம் என்னசொல்லுவோம்?தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்? ரோமர் 8:31

எதிர்க்கும் சக்திகள், பிரச்சினைகள், அசுத்த வல்லமைகள் உலகத்தில் இருந்து நமது ஆவிக்குரிய வளர்ச்சி, கிறிஸ்துவின் நற்செய்தியை தடைபண்ணுதல், தேவ சபைகளில் சிக்கல்கள், தேவ இராஜ்ஜியத்தின் முன்னேற்றத்தை தடுப்பது போன்ற நோக்கங்களில் செயல்படுகின்றன. எனினும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இந்த தீய வல்லமைகளை எதிர்கொள்ள முழு அதிகாரத்தையும் அருளியுள்ளார் (மாற்கு 16:17; லூக்கா 9:1-2). இதற்கு நாம் (1). ஆண்டவரோடு நெருங்கி நடந்து ஜீவ வசனம் மற்றும் வல்லமையை பெற்றுக் கொள்ளவேண்டும்; (2) எல்லா சூழ்நிலைகளையும் எதிர்கொள்ள கர்த்தரில் விசுவாசமும் நம்பிக்கையும் கொள்ள வேண்டும்; (3). இயேசுவின் நாமத்தில் அவற்றை தைரியமாக துரத்த வேண்டும், (4). **தேவ வார்த்தைக்கு கீழ்ப்படிந்து நடக்க வேண்டும்.நமது சத்துருக்களை எதிர்த்து தேவ இராஜ்ஜியத்தை ஸ்தாபிக்க கிறிஸ்து இயேசுவுக்குள் உள்ள ஜெயத்தின் அதிகாரத்தை பயன்படுத்துகிறோமா?**

### தேசத்திற்காக ஜெபியுங்கள் - வழக்கறிஞர்கள்

- நம்பிக்கையுடைய, நேர்த்தியான ஆய்வு மேற்கொள்ள, சரியான தீர்வுடன் நன்கு விவாதிக்க, கட்சி காரர்களுக்கு உண்மையுள்ளவர்களாக, மனசாட்சிக்கு பயந்து நடக்க
- உண்மையுள்ள வார்த்தைகள், சட்டத்திற்கு ஏற்ற நடவடிக்கை, நியாயத்திற்கு போராடுதல், குடும்ப பொது வாழ்க்கையில் உறுதியான நிலைப்பாடு
- ஏழ்மை, தேவையுள்ளவர்களின் சார்பில் தங்கள் வாதத்தை அன்பு, நியாயம் எனும் அடிப்படையில் நீதியுடன் உயர்த்த பாடுபடுதல்
- மனித உரிமைகளின் புனிதத்தன்மை காக்கப்பட ஊக்கமுடன் தற்காப்பு விவாதம் செய்ய

நாள் 7

# கொடிகள்
# கிறிஸ்துவுக்காக ஸ்தானாபதிகள்

**ஆனபடியினாலே, தேவனானவர் எங்களைக்கொண்டு புத்திசொல்லுகிறதுபோல, நாங்கள் கிறிஸ்துவுக்காக ஸ்தானாபதிகளாயிருந்து, தேவனோடே ஒப்புரவாகுங்கள் என்று, கிறிஸ்துவினிமித்தம் உங்களை வேண்டிக்கொள்ளுகிறோம். 2 கொரி 5:20**

**இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக்கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது. மத் 5:16**

நமது தேசத்தில் தேவ இராஜ்ஜியத்தின் ஸ்தானாபதிகளாக நாம் இருக்கிறோம். பரம பிதாவுக்கும் இரட்சகராகிய கிறிஸ்துவுக்கும் பிரதிநிதிகளாக நாம் கனத்துடனும், உத்தமத்துடனும், கவுரவத்துடனும் இதனை செய்யவேண்டும்.தேவனுக்கு முன்பாகவும் மற்றவர்களிடம் தூய்மையுடனும் பரிசுத்தத்துடனுமான ஜீவியத்தை ஜீவிக்க வேண்டும்.தேவனுடைய அன்பு, சமாதானம் இரக்கம் இவற்றிற்கு நாம் ஸ்தானாபதிகள். தேவனுடைய இரட்சிப்பின் செய்தியும், நித்திய ஜீவனும் நம் அயலாருக்கும் இரட்சிக்கப்படாதோருக்கும் வேறுபாடின்றி பறைசாற்ற வேண்டும்.

உன்னதமான தேவனுக்கு ஸ்தானாபதிகளாகிய நாம் எல்லா வேளைகளிலும் அவருக்குப் பிரியமாய் நடப்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.கிறிஸ்தவ விசுவாசத்தை சத்தியத்துடனும், நேர்மையுடனும் சிறந்த முறையிலே நடப்பிக்க வேண்டும்.எதிர்ப்புகளும் அநீதிகளும் நம்மைச்சுற்றிக் காணப்பட்டாலும் நாம் மன்னிப்பை ஈந்து, தீமையை நன்மையினால் வெல்லுவதற்கு இடங்கொடுக்க வேண்டும் (ரோமர் 12:21). **உன் ஜீவியம் கிறிஸ்து வுக்காக பிரகாசிக்கிறதா அல்லது உலகத்தில் மற்றவர்களைப்போல காணப்படுகிறதா?**

### தேசத்திற்காக ஜெபியுங்கள் - உள்துறை அமைச்சு

- தேவ பயம் எப்பொழுதும் அவர்களுக்குள் காணப்பட. நேர்மை, தாழ்மை, உத்தமம் ஆகியவை – ஆண்கள் மற்றும் பெண் அதிகாரிகளுக்குக் காணப்பட
- பலவகை இன மத, மொழிகளைச்சார்ந்த எல்லா மனிதர்களுக்கும் நன்மை சேரும்படிக்கும் (கொள்கை திட்டங்கள் உட்பட) இனங்களை வேற்றுமைப்படுத்தும் எந்தவிதக் கொள்கையும் அமுல் படுத்தாதபடி

நாள் 8

# கொடிகள்
# நிலைத்தன்மையுடைய அசைக்கமுடியாத

**ஆகையால், எனக்குப் பிரியமான சகோதரரே, கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக. 1 கொரி15:58**

**விழித்திருங்கள், விசுவாசத்திலே நிலைத்திருங்கள், புருஷராயிருங்கள், திடன்கொள்ளுங்கள்.1 கொரி 16:13**

மலேசியாவில் திருச்சபைகள் சில சவால்களை சந்தித்துக்கொண்டிருக்கின்ற காலம் இது.இதற்கு முன்பு சந்தித்திராத எதிர்மறை சூழ்நிலைகளை அனுபவிக்கிறோம்.மற்ற கும்பல்கள் உட்புற பகுதிகளில் தங்கள் ஆக்கிரமிப்பை சில யுக்திகளின்வழி கிறிஸ்துவிலிருந்து பிரித்து மதம் மாற்றிக்கொண்டிருக்கின்றனர். அவர்களுக்கு கொடுக்கப்படுகிற ஆதரவும் சலுகைகளும் அவர்கள் பக்கம் திரும்ப வகைசெய்கின்றன.

இருப்பினும் நாம் நம்பிக்கையை இழக்கவில்லை.இவற்றின் மத்தியில் சபை உறுதியாகவும் திடமாகவும் நின்றுதேவ நோக்கத்தை நிறைவேற்ற வேண்டும்.கர்த்தராகிய இயேசு சொன்னார்இந்தக்கல்லின் மேல் என் சபையைக்கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை (மத் 16:18).நம் நம்பிக்கை அந்த தேவன் யார் என்றும் அவர் செய்வேன் என்று சொன்ன வார்த்தையின் மேல் நிற்கிறது. நாம் விசுவாச த்தில் முன்பாகச்சென்று கிறிஸ்துவுக்கு உடன் வேலையாட்களாய் முன்னேறுவோம். **உன் விசுவாசம் சூழ்நிலைகளினால் நிலைகுலைந்து போயுள்ளதா அல்லது கிறிஸ்துவுக்குள் வேரூன்றப்பட்டுள்ளதா?**

### தேசத்திற்காக ஜெபியுங்கள் - காவற்துறை

- போலீஸ்காரர்கள் நேர்மை, உத்தமம், நடுநிலை தன்மைகள் கொண்டிருந்து அவர்களுக்குள் ஓர் உருமாற்றம் வர ஜெபியுங்கள்
- நம்மை இரவும் பகலும் விழித்து காவல்புரிகிறவர்களை தேவன் பாதுகாக்க ஜெபி. சில தீவிரவாத ஆயுதப்படையினரை நம் நாட்டில் வெளிப்படுத்தின தேவனை ஸ்தோத்தரிப்போம். போலீஸ்படையினர் அவர்தம் குடும்பம், நண்பர்களை தேவனே பாதுகாக்க ஜெபிப்போம்.
- போலீஸ்படையினரோடு மற்ற சட்டங்களை பராமரிக்கிற துறைகள் (நீதித்துறை, சட்டமராமரிப்பு துறை, பொது ப்ரொசிக்யூட்டர்) இணைந்து பொது மக்கள் நலனுக்கு முன்னுரிமை வழங்க

## நாள் 9

# கொடிகள்
# நமது சமூகத்தில் ஏற்படுத்தும் தாக்கம்

**நமது சமூகத்தில் ஏற்படுத்தும் தாக்கம்**

**அவரை விசுவாசியாதவர்கள் எப்படி அவரைத் தொழுதுகொள்ளுவார்கள்?அவரைக்குறித்துக் கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்?பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக் கேள்விப்படுவார்கள்?அனுப்பப்படாவிட்டால் எப்படிப் பிரசங்கிப்பார்கள்?சமாதானத்தைக்கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவைகள் என்று எழுதியிருக்கிறதே.ரோமர் 10:14-15**

**நான் பிரதானமாய்ச் சொல்லுகிற புத்தியென்னவெனில், எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ணவேண்டும்; நம்முடைய இரட்சகராகிய தேவனுக்குமுன்பாக அது நன்மையும் பிரியமுமாயிருக்கிறது. எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார். 1 தீமோ 2:1,3,4**

தேசத்திற்கு உருமாற்றத்தையும் ஆசீர்வாதங்களையும் ஏற்படுத்தும்படி பூமிக்கு உப்பாகவும் உலகத்திற்கு வெளிச்சமாகவும் இருக்க விசுவாசிகள் அழைக்கப்பட்டிருக்கிறார்கள். நமது இரட்சகராகிய இயேசுவின் மூலம் நமக்கு வேத வசனமும் நித்திய ஜீவனும் உண்டு.பூமியில் தனிப்பட்டவரின் ஜீவியத்தில் மாற்றம் ஏற்படுத்தும்படி நம்மிடம் சத்தியமும் ஜீவன் தரும் செய்தியும் இருக்கின்றது.நமது பலனுக்கு மாத்திரம் இந்த சத்தியத்தை வைத்து க்கொள்ள தேவன் பிரியப்படவில்லை.மாறாக நாம் இவ்வுலகத்திற்குச்சென்று கிறிஸ்துவைப்பின்பற்றும் சீடர்களை ஏற்படுத்த வேண்டுமென்கிறார்.

தேவ ஜனங்கள் மனமாற்றத்திற்கு நின்றுவிடாமல் சீடர்களாய் துரிதமாய் எழும்பி செல்லவேண்டியது அவசியம். அனைத்து சமூகத்தின் வட்டங்களிலும் தாக்கங்களை ஏற்படுத்தும் வண்ணம் திருச்சபையும் திருச்சபையின் தலைவர்களும் விசுவாசிகளையும் சீடர்களையும் தேறச்செய்து தலமைத்துவத்தைக் கற்றுக்கொடுக்க வேண்டும். தேவ சித்தத்தைச்செய்ய சபை முழுவதும் எழும்பி அர்ப்பணிப்பும் துணிவும் நிறைந்து செல்வோமாகில் நமது சமூகத்தில் ஸ்தல சபையின் பங்கும் தாக்கமும் காணப்படும். **நம்மைச்சுற்றியுள்ள சமூகத்தினர் மத்தியில் மாற்றங்களைக்கொண்டுவரும் சுவிசேஷத்தின் வல்லமையின் தொடுதலை இழந்து விட்டோமா?**

### தேசத்திற்காக ஜெபியுங்கள் - குடிநுழைவுத்துறை

- பொதுமக்களுக்கு வழங்குகிற தங்களது சேவையில் சரியானவற்றிற்கு தைரியமாய் அவர்கள் எழும்பி நிற்க
- தங்கள் பொறுப்புக்களை நேரத்தோடு செயல்படுத்த மக்கள் நம்பிக்கையுடன் அவர்களை அணுக
- பணம் மற்றும் நெறியில் அவர்கள் நேர்மையுள்ளவர்களாய் காணப்பட




# கொடிகள்
# அடுத்த தலைமுறையை ஆயத்தப்படுத்த

**அடுத்த தலைமுறையை ஆயத்தப்படுத்த நூனின் குமாரனாகிய யோசுவா என்னும் கர்த்தரின் ஊழியக்காரன் நூற்றுப்பத்து வயதுள்ளவனாய் மரணமடைந்தான். அவனை எப்பிராயீமின் மலைத்தேசத்திலுள்ள காயாஸ் மலைக்கு வடக்கேயிருக்கிற அவனுடைய சுதந்தரத்தின் எல்லையாகிய திம்னாத்ஏரேசிலே அடக்கம் பண்ணினார்கள். அக்காலத்தில் இருந்த அந்தச் சந்ததியார் எல்லாரும் தங்கள் பிதாக்களுடன் சேர்க்கப்பட்டபின்பு, கர்த்தரையும், அவர் இஸ்ரவேலுக்காகச் செய்த கிரியையையும் அறியாத வேறொரு சந்ததி அவர்களுக்குப்பின் எழும்பிற்று.யோசுவா 2:8-10**

இன்றைய தலைமைத்துவம் தோய்ந்துபோகிறபடியால் மலேசியத்திருச்சபையின்எதிர்காலம் என்பது எந்த அளவுஅடுத்த தலைமுறையை ஆயத்தநிலையில் வைத்திருக்கிறதைப் பொறுத்தே இருக்கிறது. சபைக்கு வரும் சவால்களும் மிரட்டல்களும் பெருகிக்கொண்டே போகிறபடியால் சூழ்நிலை மிகச் சிக்கலாகிக்கொண்டு வருகிறது. நாம் இன்று சந்தியில் நிற்கிறோம்– ஊழிய தமைத்துவங்களில் அதிகமான ஊழியர்கள் இறுதிக்கட்டத் திற்கு போய்விட்டபடியால் அவர்கள் இடத்தை நிரப்ப அடுத்த சந்ததி ஆயத்தப்பட வேண்டும்.

யோசுவாவிற்குப்பின் அவனையொத்த வழிநடத்தும் தலைவர்கள் தெளிவாக காணப்படாததால் இஸ்ரேலுக்கு சிக்கலாகிப்போனது.பெற்றோர்களுக்குக் கூட தங்கள் பிள்ளைகளுக்கு கற்றுத்தரவும் கர்த்தருடைய வழிகளில் நடக்கச்சொல்லும் திராணியும் இல்லாதிருந்தது.யோசுவா காலத்து தலைமுறை மரித்தபின் அடுத்த தலைமுறை கர்த்தரையோ அவர் செய்த மகத்துவ செயல்களையோ அறியாமற்போனார்கள்.

அந்நாட்களிலே இஸ்ரவேலில் ராஜா இல்லை; அவனவன் தன்தன் பார்வைக்குச் சரிப்போனபடி செய்துவந்தான். நியாயாதி 21:25 ஆகவே இஸ்ரேலில் ஒரு குழப்பமும் ஒழுங்கற்ற நிலையும் ஏற்பட்டது. **கிறிஸ்துவைப்பின்பற்றும் அடுத்த தலைவர்களை உருவாக்க பாடுபடுகிறாயா? இடைப்பட்ட உறவை சீர்செய்ய நீ ஆற்றும் பங்கு என்ன?**

**தேசத்திற்காக ஜெபியுங்கள் - பாதுகாப்புப் படையினர்**

- தங்கள் பணிகளில் மிகச்சிறந்த நிலையை அடையவும் நேர்மை, உண்மை மற்றும் விசுவாசம் இவற்ற அவர்கள் கடைபிடிக்க
- நல்ல நிர்வாகம், தளரா ஊக்கம், சரியான தீர்மானம் எடுக்க
- அதிகாரத்தை மதித்து கணக்கொப்புவிக்கும் மனப்பாங்குடன் பணியாற்ற

நாள் 11

# கனி
# முதலும் முதன்மையும்

வாசி - ஆதி 1:28

கனி தருதலை நமது தேவன் முதலிடத்தில் வைத்திருக்கிறார்.துவக்கத்திலேயே முதல் மனிதனையும் மனுஷியையும் ஆசீர்வதித்தபின்னர் அவர் கொடுத்த கட்டளை பலுகிப்பெருகுங்கள் என்பதாகும். ஏன் இது முதலும் முதலிடத்திலும் இருக்கிறது?ஏனெனில் இதன்வழிதான் மனிதன் பூமியை நிறப்பி ஆண்டுகொள்ளுவான்-ராஜாவின் ஆளுகையை விரிவாக்கும் ஒரு செயல்பாடு.

ஆதாம் ஏவாளுக்கு இட்ட முதல் கட்டளைக்குப்பின்னர் நிறைய காரியங்கள் நடந்தேறிவிட்டன- மனிதனின் வீழ்ச்சி, இஸ்ரேல் தாச தோற்றுவிப்பு, இயேசு கிறிஸ்து மூலமாய் மீட்பு, திருச்சபையின் பிறப்பு. யோவான் 15:105 வரையிலான கனிகொடுங்கள் எனும் இயேசுவின் வார்த்தைகள் ஆவிக்குரிய ஸ்தானத்தை எட்டியுள்ளது. கனி எனும் சொல்லுக்கு ஒரு விசுவாசியின் ஜீவியத்திலிருந்து நல்ல விளைவு என்றும், அது கனி கொடுப்பவருக்கு மாத்திரமல்ல அதின்வழி மற்றவர்களுக்கு தாக்கத்தையும் உண்டாக்கி தேவனுடைய நித்திய நோக்கத்தை நிறைவேற்றுகின்றது.

இப்பொழுது துவக்கத்திலிருந்து தேவ அழைப்பை நிறைவேற்றும் காலம் வந்துள்ளது.நாம் தேவ குடும்பத்தில் பிறந்துள்ளோம். ஆனால் கேள்வி என்னவென்றால் **நம்மை வைத்துள்ள இடத்தில் நாம் கனி ஈந்து பெருகி தேவ இராஜ்ஜியத்தை விரிவாக்குகிறோமா?**

## தேசத்திற்காக ஜெபியுங்கள் - கிளந்தான்

- கிளந்தான் மாநிலம் ஆழமான வெளிப்பாட்டிற்குள் சென்று அந்த ஒரே உண்மையான தேவனை அறிந்துகொள்ள. கனவு தரிசனங்களில் மூழ்கி தேவ அன்பில் வல்லமையான ஒரு உருமாற்ற சந்திப்பு நடைபெற
- சமூகமும் அயலகத்தாரும் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு பாதிப்பிலிருந்து மீளவும், தங்கள் வாழ்க்கை தரத்தை சரியான உணவு, மருந்து, கல்வி மற்ற அடிப்படை வசதிகள் பெற்று மீண்டும் தலையெடுக்க. தங்கள் உரிமை இழக்காத, துயரமும் வறிய நிலையும் நீங்க
- சபை வலுவாக எழும்பி நின்று தங்கள் சமூகத்தினரிடையே ஒரு வேறுபாட்டை காண்பிக்க. கிறிஸ்தவ தலைவர்கள் எழும்பி பலவீனரை சுகமாக்கி தொலைந்துபோன சந்ததிக்குள் சீஷத்துவத்தை உருவாக்க.

# நாள் 12

# கனி
# தங்கள் தங்கள் ஜாதியின்படியே

**வாசி – ஆதி 1:11-13**

**சிருஷ்டிப்பின் துவக்கத்திலேயே பெருக்கத்தின் அமைப்பை தேவன் ஏற்படுத்தினார்.பூமியானது புல்லையும், தங்கள் தங்கள் ஜாதியின்படியே விதையைப் பிறப்பிக்கும் பூண்டுகளையும் தங்கள் தங்கள் ஜாதியின்படியே தங்களில் தங்கள் விதையையுடைய கனிகளைக் கொடுக்கும் விருட்சங்களையும் முளைப்பித்தது. தேவன் அது நல்லது என்று கண்டார். –ஆதி 1:12**

நவீன அறிவியல் மரபணுவின் மர்மங்களை தொடர்ந்து வெளிக்கொண்டு வருகின்றன.அதினதின் டி.என்.ஏ. அதனையே உற்பத்தி செய்யவும் அதின் பரம்பரைத்தன்மையை பாதுகாக்கவும் செய்கின்றன.

சீஷத்துவத்தில் கனி ஈயும் அம்சம் அடங்கியுள்ளது. 1 கொரி 11:1ல் நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறது போல, நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள்.இயேசுவை பின்பற்ற தன் வாழ்க்கையை மேற்கோள் காட்டுகிறார்.கிறிஸ்துவை பின்பற்றுவது எதனை பிரதிபலிக்கும் என்பதை படம்பிடித்துக்காட்டுகிறார். இறுதியாக கிறிஸ்துவின் மாதிரியைத்தான் பவுல் மற்றவர்கள் ஜீவியத்தில் வெளிக்காட்டுகிறாரேயன்றி தன் வாழ்க்கையை அல்ல. **இந்த வித நற்செய்தி டி.என்.ஏ. தான் நபருக்கு நபர், சந்ததி சந்ததியாக போக வேண்டும். நற்செய்தி கூறுவதில் நல்ல உக்கிராணர்களாக, நம் வாழ்க்கையில் நமக்கு அளிக்கப்பட்ட உத்தரவாதத்தை நீங்களும் நானும் உத்தமமாக செயல்படுத்துகிறோமா?**

### தேசத்திற்காக ஜெபியுங்கள் - பஹாங்

- கேமரன் மலையில் வெளிநாட்டவர்களை வேலைக்கமர்த்தும் முதலாளிகள் தங்கள் வேலையாட்களை நியாயமாக நடத்த. அதில் பணிபுரியும் கிறிஸ்தவர்கள் அவர்கள் நலனில் ஒரு வேறுபாட்டைக் காண்பிக்க.
- கெந்திங் மலையில் பணிபுரியும் கிறிஸ்தவர்கள் தங்கள் அழைப்பை புரிந்து கொண்டு தங்கள் தாலந்துகளையும் சாதனங்களையும் பயன்படுத்தி தனித்து இருப்பவரை, குடும்பங்களை நிபுணத்துவ பணிபுரிபவர்களை சுகமளிக்க, நிலைநிறுத்த சீர்படுத்த, கட்ட
- உலகத்தில் ஆக பழமைவாய்ந்த நமது இயற்கை வளங்கள் பராமரிக்கப்பட, காடு மழை நீ ர் வளம் பராமரிக்கப்பட. நிர்வாகத்தில் உள்ளவர்கள் நமது வளங்களை விவேகத்துடனும், புரிந்துணர்வோடும், நியாயமுடனும் பராமரிக்க



## நாள் 13 கனி – ஒன்பது

**வாசி – கலாத்தியர் 5:16-25**

**நல்ல மரம் நல்ல கனிகளைக்கொடுக்கும் கெட்டதை அல்ல. நல்ல மரத்திற்கும் கெட்ட மரத்திற்கும் உள்ள வேறுபாட்டை எப்படி கூறுவாய்.?அதின் கனிகளினாலே என இயேசு கூறுகிறார் (மத் 7:18). ஒரு விசுவாசியின் ஜீவியத்தில் உற்பத்தி ஆக வேண்டிய நல்ல கனிகளின் பட்டியலை கலா 5:22-23 விவரிக்கிறது. நமது மனுஷீக தீர்மானத்தில் கனிகளை உருவாக்க நினைக்கும்போதுதான் சிக்கல் எழும்புகிறது.பெரும்பாலும் அவை தோல்வி மற்றும் ஏமாற்றத்தில் முடிவடைகிறது.**

யோவான் 15ல் அவரில் நிலைத்திருக்கும்போது மிகுந்த கனிகளைக்கொடுப்போம் எனும் பதில் வருகிறது. நம்மை அவர் ஊழியங்களுக்கு நியமிக்கும்போது நாம் அவரில் யார் என்பதை அடையாளங்காண வேண்டும்.அப்பொழுது தான் ஊட்டச்சத்து அவரிடமிருந்து பெற்று வளரவும் நல்ல கனி கொடுக்கவும் முடியும். அவரில் சார்ந்து அவர் வார்த்தையில் கட்டப்படும்போதுதான் நமது ஆத்துமாவை நிலைநிறுத்தி நமது குணாதிசயங்களை நேராக்கி நமது மனப்பாங்கையும் எண்ணங்களையும் அவருக்குள் கொண்டுசெல்வார். நாம் அவருக்காக என்ன செய்ய முடியும் என்பதைக்காட்டிலும் நாம் அவருக்குள் என்னவாக ஆகுகிறோம் என்பதில் அவர் ஆர்வமுள்ளவராய் இருக்கிறார்.

பரிசுத்த ஜீவியத்திற்கும் உருமாற்றத்திற்கும் நமது பலத்தைச் சார்ந்திராமல் நமது முதன்மைகளை மாற்றி கிறிஸ்துவுக்குள் நிலைத்திருக்க செய்வோம்.உள்ளிருந்து வெளியே மாற்றத்திற்கு அவரே நடப்பிக்க இடங்கொடுப்போம். **நாம் நமது சொந்த கனியை உற்பத்தி செய்கிறோமா அல்லது அவரில் சார்ந்திருப்பதினால் கனி கொடுக்கிறோமா?**

### தேசத்திற்காக ஜெபியுங்கள் - திரெங்கானு

- தங்கள் நலனைக்காட்டிலும் மக்கள் மற்றும் சமூகத்தினரை பேண சுல்தான், மந்திரி பெசாருக்காக ஜெபி. விவேகத்துடனும், பரிவுடனும் தயாளத்துடனும் மக்களின் பிரச்சினைகளையும் போராட்டங்களையும் மேற்கொள்ள
- 0.2% கிறிஸ்தவர்கள் தங்கள் பங்கு மற்றும் செல்வாக்கை சமூகத்தினரிடையே காண்பிக்க, அவர்களோடும் அயலாரோடும் ஜீவனுள்ள தேவனோடும் அனுதினமும் வளருவதற்கு இன்னும் பலப்படுத்த

# நாள் 14 கனி – நமது வார்த்தைகள்

**வாசி – மத் 12:33-37**

**வாசித்த இந்த பகுதியில் மறுபடியும் கனிகொடுக்கும் அம்சத்தை கூறி என்னவிதமான கனி – (நல்ல அல்லது கெட்ட) கொடுப்பாய் என பேசுகிறார். எல்லாரும் கனி கொடுப்பர் ஆனால் என்னவித கனி, அதனை எப்படி அறிந்து கொள்வாய் எனும் கேள்விக்கு எளிதான பதில் உண்டு.– உன் வார்த்தையில்தான்.**

வார்த்தைகளை அற்பமாய் எண்ணும் காலத்தில் நாம் வாழுகிறோம் ஆனால் வார்த்தைகளின் மதிப்பை இயேசு மிகவும் உயர்த்தி காண்பிக்கிறார். வார்த்தைகள்(கனி) எவ்விடத்திலிருந்து வரப்பெறுகிறது(மரம்) என்பதை இருதயத்தின் மிகுதியினால் வார்த்தைகள் வெளிப்படும் என விவரித்துகூறுகிறார்.இருதயத்தின் உள்நோக்கத்தை அறிந்த அவர் நல்ல கனிகளை கொடுக்க முயற்சிக்கும் கெட்ட மரத்தை சாடுகிறார்.உள்நோக்கத்திற்கும் வெளிவரும் வார்த்தைகளுக்கும் உண்மை இருக்க வேண்டும்.இவை இரண்டும் சரியாக இருந்தால் ஏற்ற, சரியான நடவடிக்கை வெளிப்படும்.

பேசப்படும் வார்த்தைகளை நாம் அற்பமாக எண்ண வேண்டாம்.1 கொரி 1:21ல் பைத்தியமாய் தோன்றுகிற வசனிப்பினால் அநேகர் இரட்சிக்கப்படுகிறார்கள். ஆனால் மூடத்தனமாய் பேசுகிற வார்த்தைகளினால் அநேகர் காயப்பட்டு மனஸ்தாபப்பட்டு ஆண்டவரையும் அவருடைய சபையையும் விட்டு விலகினவர்கள் அநேகர். **ஆண்டவருடைய எச்சரிப்புகளைப் பெற்றபின் நாம் பேசுகிற வார்த்தைகள் நம்மை நியாயப்படுத்துமா அல்லது நியாயத்தீர்ப்புக்கு இட்டுச்செல்லுமா?**

### தேசத்திற்காக ஜெபியுங்கள் - சரவாக்

- சரவாக்கில்தான் முஸ்லிம் மதத்தினரைவிட (30%) கிறிஸ்தவர்கள் அதிகமாக இருக்கின்றனர் (44%). ஜெபத்திலும் ஜாமக்காரனாகவும்மாநிலத்தின் சபைகள் ஊக்கமான ஜெபத்தில் தரித்திருக்க ஜெபியுங்கள். சபைத்தலைவர்கள் தேவனுடைய இருதயத்துடிப்பை நிதானித்து அறிந்து வியூகங்கள் வகுத்து அதிகாரத்துடனும் தொடர் ஜெபத்திலும் தரித்திருந்து பலவான்களைக் கட்டவும் அவருடைய வருகைக்கு அடித்தளம் நாட்டவும் அவர்களுக்காக ஜெபி.
- சரவாக் மாநில முதல்வர் டான்ஸ்ரீ டத்தோ பாத்திங்கி அடினான் சாத்தீம் அவர்களுக்காக ஜெபி. அவர் தமது கடமைகளை நியாயத்துடனும் நீதியுடனும் எல்லா சாதி மக்களிடமும் ஞானத்தோடும் நேர்மையுடனும் உண்மையுடனும் நடப்பிக்கவும் நேர்மையுள்ள நம்பிக்கையுடைய, தேவ பயம் நிறைந்த மனிதர்களிடம் ஆலோசனை பெறவும் ஜெபி.
- பல சாதி பூர்வீக மக்கள் தங்கள் இருதயத்தை ஜீவனுள்ள சாந்தமான பரிசுத்த ஆவிக்கும் அவருடைய கிருபை மற்றும் இரக்கத்திற்கு திறந்துகொடுக்க ஜெபி.

நாள் 15

# கனி – சமாதானமுள்ள நீதியின் கனி

**வாசி – எபிரெயர் 12:7-11**

**நீதியாகிய சமாதான பலனைக்குறித்து வேதம் கூறுகிறது.எதற்கு தேவன் அவருடையவர்களையும் தாம் நேசிக்கிறவர்களை சிட்சிக்கிறார் என்றும் அது எப்படி பலனையும் பரிசுத்தத்தையும் கொண்டுவருகிறது எனவும் வசனம் 10 விவரிக்கிறது.**

முதலாவது துக்கம் பிறகு சமாதானம்; முதலாவது சிட்சை பின்னர் பலன் எனும் ஒரு முறைமை இங்கு காணப்படுகிறது.

உங்கள் வாழ்க்கையில் பாவத்தினிமித்தம் நீங்கள் சில பாடுகளுக்குள், சிட்சைக்குள் கடந்து செல்லுகிறீர்களா?தேவனைவிட்டு தூரமாக செல்ல கீழ்ப்படியாமையும் பிடிவாதமும் காரணமாய் இருக்கிறதா?முதாவது அவர் உங்களுக்கு எதிராளி அல்லர்–அவர் உங்கள் பக்கம்தான்.அவர் பாவத்திற்கு எதிரானவர்.ஏனெனில் பாவம் உங்களையும் உங்களைச் சுற்றிலுமுள்ளவர்களையும் பாதிக்கிறது.அன்பு கூறுகிற தகப்பனைப்போல தம்முடைய வல்லமையிலே பாவம் உங்களை துன்புறுத்தாதபடி பாதுகாக்க எவ்வகையையும் பயன்படுத்துகிறார்.

நாம் நீதியின் பாதைகளில் நடக்கும்போது நம் மனசாட்சியிலும் தேவனிலும் சமாதானம் காண்போம்.நீதியின் கிரியை சமாதானமும், நீதியின் பலன் என்றுமுள்ள அமரிக்கையும் சுகமுமாம்என்று ஏசாயா 32:17ல் கூறுகிறார் சமாதானம் நீதியின் பலன்.இயேசுவும் சாமாதானத்தை வாக்குத்தத்தமாக அருளுகிறார். குழப்பமான உலகத்தில் சிக்கித்தவிக்கும் மன உளைச்சலுக்கு சாமாதானமே கிறிஸ்தவ விசுவாச சின்னமாக விளங்குகிறது. **நீதி மற்றும் பரிசுத்த வாழ்வினிமித்தம் நீங்களும் நானும் இந்த சமாதானத்தை வெளிப்படுத்துகிறோமா?**

### தேசத்திற்காக ஜெபியுங்கள் - சமய சுதந்திரம்

- இன, சமய கலாச்சார வித்தியாசமின்றி எல்லா குடிமக்களின் உரிமைகள் சமமாய் நிலைநாட்ட அரசாங்கம் தன் கொள்கைகளை கடைபிடிக்க. ஒரு சமயத்தின் மேல் குறிப்பிட்ட மதத்தின் கொள்கை களை திணிக்காமலிருக்க
- கூட்டரசுப்பிரதேச அரசியல் சாசனம் நிலைநாட்டப்படவும் சாதாரண மக்களின் குரல் கேட்கப்படவும், மதவாதிகள் மற்றும் பழமைவாதிகளுக்கு எதிராக அரசாங்கம் கடுமையாக சட்டம் கடைபிடிக்கவும்
- பெரும்பான்மையான இனம் இரட்சிக்கப்பட, மனித சட்டங்கள் குறுக்கிடாதபடி சர்வ வல்ல தேவன் அவற்றை மேற்கொண்டு தம் வல்லமையை அவர்களுக்கு வெளிப்படுத்த.

நாள் 16

# கனி – கசப்பான வேர்கள்

**வாசி – எபிரெயர் 12:12-17**

**நீதியின் சமாதான பலனுக்குப் பிறகு எல்லாரோடும் சமாதானமாயிருக்க ஒவ்வொருவரையும் ஏவுகிறது (வ 12-14). முடமாயிருக்கிறது பிசகிப்போகாமல் சொஸ்தமாகும்படிக்கு, உங்கள் பாதங்களுக்கு வழிகளைச் செவ்வைப்படுத்துங்கள்.என வசனம் 13 கூறுகிறது. முடமும் பிசகிப்போனதும் தேவனுடன் நடப்பதை தடுக்கி விடும் பகுதிகள்உன் ஜீவியத்தில் காணப்படுகிறதா?மனந்தளராதே.விசுவாசத்தில் நட. சுகமும் நிலைத்தன்மையும் உன் பக்கமாய் இருக்கிறது.வலதுபுறமாவது இடதுபுறமாவது சாயாதே; உன் காலைத் தீமைக்கு விலக்குவாயாக. நீதி 4:27**

தொடர்ந்து முன் போகையில் வசனம் 15ல் கசப்பான வேர் பற்றிய எச்சரிப்பையும் செவிமடுக்க வேண்டும். அது ஒரு மனிதனையும் மற்றவர்களையும் அநேகரையும் கெடுத்துப்போடும்.அது முறிந்த உறவோ, பெற்றோருக்கு எதிரான கீழ்ப்படியாமையோ அல்லது சபை சரீரத்தின் பிரிவினையோ, பெரும்பாலும் அதின் மூல வேரை நாம் அறிந்திருக்கிறோம்.அதுவே நம் இருதயத்தில் ஊடுருவி குற்றப்படுத்தவும், வெறுப்பைத்தூண்டவும் மன்னிக்க முடியாதபடியும் செய்கிறது.

நீ நல்ல நோக்கங்களோடு நடந்தாலும், கசப்பான வேர் இன்னும் பிடுங்கப்படாமல் இருக்கிற பட்சத்தில் மேலும் கெட்ட கனிகளைத்தான் உற்பத்தி செய்கிறாயா? **தேவ கிருபையைப்பெற்று உன் இருதயத்திலிருந்து கசப்பான வேரை அடியோடு பிடுங்கி எறி.**

### தேசத்திற்காக ஜெபியுங்கள் - குடும்ப ஊழியம்

- குடும்பங்களில் பலமான வேதாகம அடித்தளம் நாட்டப்பட, அடுத்த தலைமுறையில் தாக்கம் ஏற்படுத்த பலமான குடும்பங்களாக எழும்ப. இல்லங்களுக்கு எதிராக தீய சக்திகளின் அனைத்து தந்திரங்களும், உபாயங்களும் தகர்த்தெறியப்பட குடும்ப போர் அணி உருவாக்கப்பட ஜெபி
- வாழ்க்கையின் எல்லா பகுதிகளிலும், பெற்றோர்கள் தேவ மகிமையில் வாழ. தங்கள் குடும்பங்களை சீஷத்துவத்திலும் பராமரிப்பிலும் முதன்மை படுத்துகிற அர்ப்பணிப்பு உள்ள பெற்றோர்கள் எழும்ப
- கிறிஸ்துவைப்பின்பற்றும் பற்றுள்ள பிள்ளைகளும் வாலிபர்களும் காணப்பட. வேத வசனத்தில் வேரூன்றவும் வேதாகம கண்ணோட்டத்தில் தேறினவர்களாய் இருந்து உலகம் மதிப்பிடுவது போல அல்லாமல் தெய்வீக நியமனத்தின்படி நிதானிக்கவும் தெரிவுகளைச் செய்யவும்ஜெபி

# நாள் 17

# கனி – அத்திமரத்தின் உவமை

**வாசி -லூக்கா 13:6-8**

**நம்மிடத்திலிருந்து தேவனுக்கு ஆகவேண்டிய 2 காரியங்கள் உண்டு.1வது உண்மைத்துவம் 2வது கனிகொடுத்தல்.அவருடைய சித்தத்தின்படி கனிகொடாமல் அவருக்கு சேவை செய்வதில் நான் உண்மையாயிருக்கிறேன் என்று சொல்வது மாத்திரம் போதாது.இதைக்கவனத்தில் கொள்வது நல்லது ஏனெனில் நாம் உண்மையாய் அவருக்கு சேவை செய்துகொண்டிருக்கலாம் ஆனால் அது அவருடைய திட்டத்திலிருந்து விலகினதாக இருக்கக்கூடும்.பரிசுத்த ஆவியின் வழிநடத்துதல் இல்லாவிட்டால் நமது சேவையில் உண்மைத்துவம் இருந்தாலும் அது தவறானதாக இருக்கலாம்.இது ஏனெனில் நமது இருதயம் எல்லாவற்றிற்கும் மேலாக வஞ்சனை உள்ளதாய் காணப்படுகிறது.**

தேவ கோபாக்கினை வருவதற்கு முன்பாகஇஸ்ரவேலர் மனந்திரும்பவேண்டிய அவசியத்தை அத்திமர உவமையின் மூலமாக இயேசு விவரிக்கிறார்.இன்னொரு ஆண்டு அநுக்கிரகம் அவருடைய கிருபையின் ஆண்டாக மனந்திரும்ப வாய்ப்பு வழங்கப்பட்டது.கனி கொடாமல் போனால் அந்த மரம் வெட்டுண்டுபோகும்.

காலத்தின் அவசரத்தை நாமும் உணரவேண்டும்.தேவனுடைய கிருபை மற்றும் பொறுமையை எதேச்சையாக எடுத்துக்கொள்ளக்கூடாது.அத்திமரம் ஜீவன் உள்ளதாக காணப்பட்டாலும் எஜமான் எதிர்பார்க்கும் கனிகளை கொடுக்கவில்லை. அதுபோல நம் ஜீவியம் உயிருள்ளதாக இருந்தாலும்உண்மையில் கனியற்ற மலடியாகத்தான் உள்ளது.தோற்றத்தில் தெய்வீகம் காணப்பட்டாலும் பரிசுத்த ஆவியின் கிரியை நம் ஜீவியத்தில் உள்ளதா?

### தேசத்திற்காக ஜெபியுங்கள் - சமுதாயம்

- இளைஞர் மற்றும் பெரியோர் மத்தியில் உள்ள பிணக்குகள் பெருமை, விரோதம் நீங்கி அன்பு, தாழ்மை ஊக்குவிப்பினால் கட்டப்பட
- தீமைகள் நீங்க. பேராசை, ஊழல், இச்சை, போதை, பாலியல், கொலை, சுயம் நம் மண்ணை ஆக்கிரமிக்காதபடி. தேவவெளிச்சம் இருளை நீக்க. தீயநெறி, இராணுவ போராளிகள், மனித கடத்தல் மலேசியாவில் நுழையாதபடி பாதுகாப்புப் படையினர் பணிசெய்ய
- பல்வேறு அரசுசாரா இயக்கங்கள் நம் சமூகத்தில் மேம்பாடு கொண்டுவர. நீர் மார்க்கங்கள், அநாதைகள் பராமரிப்பு இல்லம், பசியுற்றோருக்கு உணவு, பிணியாளிகள், நோயுற்ற வயோதிகர்பராமரிப்பு, பிராணிகள் கரிசனை. சிறந்த நிதி, சாதனங்களை இவர்கள் விவேகமாய் நிர்வகிக்க தேவ தயவு.

# நாள் 18

# நறுக்குதல்– நறுக்கும் எஜமானன்

**வாசி - யோவான் 15:1-2**

**ஆரோக்கியத்திற்கும் கனிகொடுத்தலுக்குமான நோக்கத்திற்காக செடியின் சில பாகங்களை நீக்குவது தோட்ட வளர்ப்புக்கலைகளில் ஒன்றாகும். தோட்டக்காரன் தன் பராமரிப்பை அறிந்திருக்கிறான். தோட்டக்கார எஜமானாகிய பிதாவே கிளை நறுக்கும் பணிகளை செய்கிறார் என இயேசுவிவரிக்கிறார்.**

தேவனுடைய அன்புதான் அவருக்கும் பிள்ளைகளுக்கும் உள்ள உறவின் அஸ்திபாரம்.தோட்டக்காரன் தன் செடிகளை அறிந்திருக்கிறது போல அவரும் தன் பிள்ளைகளை அணுக்கமாய் அறிந்திருக்கிறதில் மனமகிழ்கிறார்.தேவனுக்கு அவனவனுடைய பலம் பலவீனங்கள் நன்கு தெரியும் (சங் 139).

அவர் யார் என்பதை நாம் அறிந்திருக்கிறபடியினால் அவர் நம்மை கவனமாய் பராமரித்துக்கொண்டிருக்கிறார் என நாம் உறுதியாக நம்புகிறோம்.நமது நன்மைக்காக அவர் சுத்தம்செய்து அவருடைய பிள்ளைகளாய் இருப்பதினால் ஒழுங்குபடுத்துகிறார் (எபி 12:4-6).இதனை கருத்தில் கொண்டு அவருடைய சுத்தம் செய்யும் பணிக்கு நம்மை ஒப்புக்கொடுப்போம்.

**நமது ஜீவியங்களில் அவருடைய நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு நீங்களும் நானும் அவரின் நறுக்குதலுக்கு அர்ப்பணிப்போமா?**

## தேசத்திற்காக ஜெபியுங்கள் - தொடர்புத்துறை ஊடக அமைச்சு

- அதின் அமைச்சர் டத்தோஸ்ரீ அஹ்மட் ஷபெரி ச்சிக். விவேக ஆலோசனைகள் கேட்டு, அனைத்து மக்களும் பயன்பெறும்படி பணிபுரிய. நேர்மை, நியாயம், சிந்தையில் வார்த்தையில் செயலில் பரிவுடன் செயல்பட
- தெளிந்த புத்தி, தேவ பார்வை, தேசத்தின் தேவைகளைப்புரிந்து நடக்க. சத்துருவின் பொய்கள் வெளியரங்கமாகி வெட்கப்பட்டுப்போக
- மேலதிகாரிகள், பங்காளர்கள், ஊடகங்கள், அமைச்சு பணியாளர்கள் இவர்களிடம் நல்ல தொடர்பைப் பேண. உண்மைத்துவத்தைப்புரிந்துகொண்டு ஊழலை களைந்தெறிய போதிய பலம்
- அதிவேக, வரம்பற்ற ஊடக உலகத்திலே, மிகவும் எளிதாக ஊடுருவும் இச்சை, வன்முறை, ஆபத்தான எதிர்மறை பணிவலை வஸ்துக்களை இந்த அமைச்சு நன்கு வழிகட்டி நாட்டிற்குள் நுழையும்பொருட்டு அதின்பணியை நன்கு செய்யும்படி அதின் நேர்மையான நீதி நிறைந்த உத்தம அதிகாரிகளாய் காணப்பட

# நாள் 19 நறுக்குதல் – எதிர்பார்க்கும் முடிவு

கனி கொடுக்கும் செடியை நறுக்கும் ஒரு தோட்டக்காரன் அது மிகுதியான கனி கொடுக்கும்படி அதனை செய்கிறான். அது சில படி நிலைகளில் செய்யப்படுகிறது.கனிகொடாத கிளைகள் எவைகளோ அவற்றைஅவன் அறிந்து வெட்டிப்போடுகிறான்.

கனிகொடாமல் இருப்பதற்கு சில காரணங்களும் உண்டு.சில ஆரோக்கியமற்ற கிளைகள் செடியிலிருந்து இணைந்திருக்கும்போது அதின் தண்டிலிருந்து வரும் ஊட்டச்சத்து கிளைக்குப்போய் சேர தடை ஏற்படுகிறது.

இன்னொரு காரணம் அந்த கிளையில் நோய் இருக்கலாம்.சரியான ஊட்டச்சத்து பெறாத செடி, நோய்க்கு இடமாகி அந்தக்கிளையில் கனிகொடாமற்போய் பிறகு அந்த கிளை வதங்கி செத்துப்போகும். அது அந்த செடியிலேயே இருக்குமானால் அந்த நோய் பரவி மற்ற பகுதிகளுக்கும் சென்று பிறகு திராட்சை தோட்டம் முழுவதும் பாதிப்பைக்கொண்டு வரக்கூடிய சாத்தியம் உண்டு.

நல்ல தோட்டக்காரன் தன் பராமரிப்பில் உள்ள பயிர்களை பாதுகாப்பது போல, நம் வாழ்க்கையில் பாவம் நம்மை பாதிக்குமாதலால் அதனை சோதித்து அறியாமல் விட்டுவிடக்கூடாது. **நமது ஆவிக்குரிய வாழ்க்கையை பாதிக்கும் வியாதி கிறிஸ்துவின் சரீரமாகிய சபையையும் பாதிப்புறச்செய்யும் என்பதை நீங்களும் நானும் அறிந்திருக்கிறோமா?**

### தேசத்திற்காக ஜெபியுங்கள் - அச்சகம்

- பத்திரிகை உரிமையாளர்கள் அனைவருக்காகவும் அவர்கள் இலாபத்திற்கும் பொறுப்பிற்கும் உள்ள சமஅளவு தெரிந்திருக்க ஜெபி. நீதியின் உணர்வு அவர்களில் காணப்பட்டு தங்கள் நேரம், தாலந்து சாதனங்கள் தேசத்தின் நன்மைக்காக பயன்பட
- பத்திரிகை ஆசிரியர்கள் மற்றும் நிருபர்கள் தங்கள் செய்திகளை பயமின்றி பட்சபாதமின்றி அனுப்ப ஜெபி. தங்கள் அறநெறி உணர்வுகளுக்கு மதிப்பளித்து நல்ல சிந்தையுடன் ஆரோக்கியமான உண்மையான செய்திகள் பிரசுரிக்கப்பட்டு தேசம் நல்லெண்ணத்தில் பயணிக்க இவர்கள் உதவி செய்யும்படி.
- பத்திரிகைத்துறையில் பணிசெய்கிற கிறிஸ்தவர்களுக்கு. பரிசுத்த ஆவியின் ஞானம், நேர்மை, நீ தி ஆகிய உணர்விற்கு ஏற்ப சமூகத்திலும் தேசத்திலும் மாறுபாட்டைக்கொண்டுவர. தங்கள் சொந்த பலத்தைச் சார்ந்து அல்லாமல் கர்த்தருடைய ஆலோசனையும் பரிசுத்த ஆவியின் வல்லமை மற்றும் பராக்கிரமத்தில் தங்கள் திறமைகளை அர்ப்பணிக்க ஜெபி.

நாள் 20

# நறுக்குதல் வழிமுறைகளும் செயல்வடிவம்

தோட்டக்காரர் நறுக்கிப்போடும் செயல்வடிவத்தை விவரிக்கும்போது வெட்டி சுத்தம்பண்ணுகிறார் எனும் பதம் பயன்படுத்தப்படுகிறது.கிளை நறுக்கப்படுதல் என்பது நிரந்தரமானது, மேலும் அது அவசியப்பட்டதினால் அன்றி தன்னிச்சையாக செய்யப்படவில்லை.அந்த வெட்டியெறியும் படலம் செத்துப்போன அல்லது வியாதிபட்டு மீட்கப்பட முடியாத கிளைகளுக்கு மாத்திரமே. வெட்டப்பட்ட இவை சேகரித்து எரிக்கப்படும் [யோவான் 16:6]

நறுக்கப்படுதல் துண்டித்துப்போடப்படுவதற்கு சமானம் ஆனால் உற்பத்திதான் அதின் இறுதி பலன்.தோட்டக்காரர் சுத்தம்செய்யும் நோக்கம் செடியின் நன்மைக்கும் மிகுந்த கனிகளைக்கொடுப்பதற்குமே.

முறையான, தொடர்ச்சியான சுத்தம்செய்தல் அச்செடியின் ஆற்றலை இன்னும் அதிகமாக்குவதற்கு.செடிகள் ஆரோக்கியமாய் வளருவதற்கு தோட்டக்காரர் அணுக்கமாக பராமரித்து கவனிக்கிறார்.அப்படித்தான் நம் தேவனும்.ஒரு மேய்ப்பன் தன் ஆடுகளை அணுக்கமாய் கவனித்து பராமரிக்கிறது போல நமது நல்ல மேய்ப்பனும் நம்மை மேய்க்கிறார். **அவர் வழிநடத்துகிற பாதை எதுவென்று நாம் அறியாதிருந்தும் அந்த நல்ல மேய்ப்பரை நீங்களும் நானும் நம்பிச்செல்லுகிறோமா?**

**தேசத்திற்காக ஜெபியுங்கள் - கலையும் கேளிக்கையும்**

- பூமியும் அதின் நிறைவும் கர்த்தருடையது. தேவனுடைய சிருஷ்டிப்பின் மகிமையை புத்தாக்க வடிவில் கலை மற்றும் கேளிக்கை ஊடகத்தைக்கொண்டு போற்றுவோம். தெய்வீகமற்ற அனைத்து ஆபாச வடிவில் இளைஞர்களை கவர்ந்திழுக்கும் இந்த மதிப்புகளில் ஓர் அருவருப்பு ஏற்பட தேவன் ஒரு நீதியின் உணர்த்துதல் அலையை ஏற்படுத்த ஜெபி.
- கலை கேளிக்கை நிறுவனங்களில் பணிபுரிகிறவர்கள் ஒரு தெளிவு பெற்று தங்கள் அழைப்பை புரிந்து அவர்களின் தாலந்துகளை நல்ல புத்தாக்கத்தில் ஈடுபடுத்தி அவரை மகிமைப்படுத்த ஜெபி.
- இந்தப்பகுதியில் விசுவாசிகளை தேவன் அபிஷேகம்பண்ணி சிறந்த தேவ மதிப்புகளையும் தெய்வீக வாழ்க்கை முறைகளையும் அவர்கள் சித்தரிக்க ஜெபி.





## நாள் 21

## நறுக்குதல்
## சுகம் கொண்டுவரும் நறுக்குதல்

நிரந்தர துண்டிப்பு நறுக்குவதின் நோக்கம் அல்ல மாறாக கனிகள் கொடுப்பதற்கு.எனவே செடியை ஆரோக்கிய நிலைக்கு கொண்டுவருவதற்கே தோட்டக்காரர் கிளை நறுக்கி பாதுகாக்கிறார்.

கிளைகள் வியாதிபடும்போது அது பரவாதபடி பாதிக்கப்பட்ட இடத்தை வெட்டிஎடுக்கிறார்.மிகவும் கவனத்து டன் செடி முழுவதும் காயப்படாதபடி மிகையாக வெட்டுவதில்லை.மறுபடியும் குணமாகி செழிக்கும்படிக்கு தன் பலத்தினால் முடிந்த அனைத்தையும் அவர் செய்கிறார்.

நமது ஆவிக்குரிய ஆரோக்கியத்தை முடமாக்கும் வியாதியை நம்மிடமிருந்து நீக்குகிறார்.நமக்குள் உள்ள ஆற்றலை முழுமையாய் வெளிப்படுத்த அவர் சுத்தம் நம்மை செய்யும்போது நம்மை சுகப்படுத்தி நிலைநிறுத்த அவர் உறுதி செய்கிறார்.அதாவது தேவனுடைய நறுக்குதல் நம்மை சுகப்படுத்துகிறது. **சுகம் பெறுவதற்காக நாம் சுத்தம் செய்யும்போது நீங்களும் நானும் அதனை சகித்துக்கொண்டு விடாமுயற்சியுடன் ஏற்றுக்கொள்கிறோமா?**

### தேசத்திற்காக ஜெபியுங்கள் - பெர்லிஸ் மாநிலம்

- பெர்லிஸ் மக்கள் மீது தேவ மகிமை பிரகாசிக்கும்படி வானம் திறக்கப்பட ஜெபி. வெகுசில கிறிஸ்தவர்களே கங்கார் பகுதியில் காணப்படுகிறபடியால் சமூக சேவைகளில் தங்களை முன்னின்று ஈடுபடுத்திக்கொள்ள எழும்பும்படி
- பல திருமணங்கள் செய்து கொள்ளும் சட்டத்தை இலகுவாக்கியிருக்கிற முடிவை இந்நாட்டின் சில பெண்கள் சார்ந்த இயக்கங்கள் எதிர்ப்பு தந்துள்ளனர். இந்த கொள்கை அமலாக்கத்தில் தேவன் இடைபடும்படியாய் ஜெபிப்போம்.
- பாடாங் பெசார் மற்றும் வாங் கெலியான் வழியாக தாய்லாந்துக்கு கடத்தலும் கள்ளக்குடியேறிகளை கொண்டு செல்லுதலும் எளிதாக நடைபெற்று வருகிறது. ஆயுதமேந்திய அதிகாரிகள் இந்த கள்ள நடவடிக்கைகளை முறியடிக்க ஜெபி.

# நாள் 22

# நறுக்குதல் மிகுந்த கனிகளைக்கொடுக்க

வியாதிபட்ட கிளைகளை மாத்திரம் நறுக்குவதில்லை மாறாக கனிகளைக் கொடுக்கும் கிளைகள் இன்னும் அதிக கனிகளைக்கொடுக்கும்படி நறுக்கப்படுகிறது. **கிளை நறுக்கப்படும் கிளைகள் ஆரோக்கியமானவைகளாய் இருந்து கனி கொடுப்பவைதான் அப்படியானால் ஏன் இன்னும் நறுக்கப்படவேண்டும்?**

தோட்டக்கலையில் ஆரோக்கியமான கிளைகள் இன்னும் அதிக வளர்ச்சிக்கும் கனிகொடுத்தலுக்கும் அதின் கிளைகள் நறுக்கப்படவேண்டும்.

தேவனோடு ஆரோக்கிய ஐக்கியத்தில் பயணிக்கிற நாமும்கூட சில வெளி தாக்கங்களால் எளிதில் வசப்பட்டு அவடருடனான நடையில் தளர்ந்துபோகிறோம்.நாம் ஆவிக்குரிய மந்தம், அலட்சியம், பரிதாபம் மேலும் பாவத் தினால்கூட பாதிக்கப்படுகிறோம்.

நாம் யாவரும் முன்னேற்றத்தில் செல்கிறோமென்றாலும்கூட தேவன் தம் வேலையை இன்னும் நம்மில் முடிக்கவில்லை. நாம் நறுக்கப்படும் வேளையில் அவருடைய பரிபூரண தெய்வீக திட்டம் நம்மை பாதிப்புறச்செய்ய அல்ல ஆனால் நம் நன்மைக்கே நடந்தேறுகிறது. அதில் சில நல்லவற்றை நாம் இழக்க நேரிடலாம், அதுவும் நன்மைக்கே ஏனெனில் அதை விட சிறந்தது நமக்கு காத்திருக்கிறது. **உன் வாழ்க்கையில் நேரம் மற்றும் ச க்தியை இழக்கிறதினால் கொஞ்சமாய் கனிகொடுக்கிறாயா?**

## தேசத்திற்காக ஜெபியுங்கள் - கெடா மாநிலம்

- தேவனுடைய சமாதானம் கெடா மக்கள் மீது அனுதினமும் பொழியப்பட தெய்வீகத்தை நீ பேசுவாயாக. இம்மாநிலத்தில் இருக்கிற சிறுபான்மை கிறிஸ்தவர்கள் சாட்சிகளாக வாழுவதற்கு ஒருமனமும் துணிவும் காணப்பட. பெருமளவு ஆசிரியர்கள் வார்த்தையில் எழும்பவும் நிலைத் திருக்கும் கனியை இளைஞர்கள் பெறவும்.
- பாலிங் மற்றும் குபாங் பாசுவில் உள்ள ஏழ்மை வீடுகள் தங்கள் வாழ்க்கையில் முன்னேற்றம் பெற மன்றாடுங்கள்.
- கூனோங் ஜெராய் மலையில் தியானம் வழி மாந்திரீகம் பெறுவதற்கு அநேகர் விஜயம் செய்வர். அப்படி அங்கு செல்கிறவர்கள் நித்திய ஜீவனுள்ள தேவனை சந்திக்க ஜெபியுங்கள்

நாள் 23

# நறுக்குதல்
# தோட்டக்காரருடைய எதிர்பார்க்குதல்

செடிகள் ஆரோக்கியமாகவும் கனிதருபவையாகவும் இருப்பதற்கு தோட்டக்காரர் அயராது பாடுபடுகிறார். அவ்வளவு உழைப்புப் போட்டபின் குறைவான கனிகொடுப்பதை எப்படி அவர் பொறுத்துக்கொள்வார்?

செடிகள் மிகுந்த கனிகளைக்கொடுக்கும்போது அது தோட்டக்காரர் மகிழ்ச்சி மற்றும் பெருமிதம் கொள்ளும் அளவிற்கு அவருடைய திறன்களின் பலனை வெளிப்படுத்தும்.

தேவனுடன் அவருடைய ஜனங்களின் உறவு நல்ல தோட்டக்காரர் அவரின் பராமரிப்பில் இருக்கும் தோட்டத்திற்கு ஒப்ப சித்தரிக்கப்படுகிறது. செடிகள் நன்கு ஆரோக்கியமாகவும் கனிகொடுக்கவும் அவர் அதனை வளர்க்கிறார், கவனிக்கிறார், பாதுகாக்கிறார், சுத்தம் பண்ணுவதில் உறுதியாய் இருக்கிறார்..

பரிசுத்த ஆவியின்மூலம் தேவனும் நித்தியமான அர்த்தமுள்ள உறவுக்காக கிரியை செய்கிறார்.அவருடைய பிள்ளைகள் நீதியின் கனிகளை ஈந்து கிறிஸ்து இயேசுவுக்குள் நிறைவான வாழ்க்கையை வாழ விரும்புகிறார். **உன் வாழ்க்கையில் தேவனுடைய எதிர்பார்ப்பையும் தரிசனத்தையும் உணர்ந்திருக்கிறாயா?**

### தேசத்திற்காக ஜெபியுங்கள் - பினாங்கு மாநிலம்

- பல்வேறு மதங்களின் புனித ஸ்தலங்களின் மாநிலமாக சுற்றுப்பயணிகளை கவர்ந்திருக்கும் ஒரு மாநிலம். நாட்டின் மிகப்பெரிய குவான் யின் கருணை மாதா சிலையும், புக்கிட் மெர்த்தாஜாம் பரிசுத்த மரியாள் திருவிழாவும் திரளான மக்களை ஈர்க்கிறது. அந்த மாநிலம் பரலோக இராஜ்ஜியத் திற்கான திறவுகோளை தேடும் ஸ்தலமாக இருக்க ஜெபி.
- ஜோர்ஜ்டவுன் வாணிப மையமாக 19ஆம் நூற்றாண்டு முதல் இயங்குகிறதும் பொருள் மதிப்பீட்டில்மக்கள் திளைத்திருக்கிற நிலையையும் கொண்டிருக்கிறது. இவை ஜனங்களை சுய திருப்தியில் வைத்துக்கொள்ளாமலும் ஆவிக்குரிய விடுதலைக்கு இருதயக்கடினத்தை ஏற்படுத்தாமலும் இருக்க ஜெபி.
- பிரிட்டிஷ் காலனித்துவத்திலிருந்து குண்டர் கும்பல் இயக்கங்களை ஆண்டுவரும் சீன கலாச்சாரத்தை வேரோடு பிடுங்க ஜெபி. மேலும் சட்டம் மீறப்படுவது, ஒழுக்கநெறிகேடுகளான விபச்சாரம், காம மையங்கள், போதை கடத்தல் இவற்றிற்கு எதிராக ஜெபி.

# நாள் 24 நறுக்குதல்– குறைத்துக்கொள்ளுதல்

நறுக்குதல் தவிர்க்கமுடியாத ஒன்றாக இருந்தாலும் நாமும் ஆரோக்கியமாக இருந்து முடிந்த அளவு சுத்தம் செய்தலைக் குறைக்கலாம்.

ஆரோக்கியமாய் இருப்பதற்கு செடியில் நிலைத்திருக்கவேண்டும்.உயிர்பெற்று, வளர்ந்து, கனிகொடுக்க மெய்யான திராட்சை செடியான இயேசுவில் கொடிகளான நாம் எப்பொழுதும் ஒட்டிக்கொண்டிருக்க வேண்டும்.அப்போதுதான் பலம் பெற்று வியாதிகள் பாதிக்காமல் தற்காத்துக்கொள்ள முடியும்.

மெய்யற்ற நித்திய மதிப்புத்தன்மைகளை பெற்றிராத நேரத்தையும் சக்தியையும் விரயம் செய்கிற எந்தவொரு சாதனத்தையும் விட்டு விலகியிருக்க வேண்டும். மெய்யான செடியில் நிலைத்திருக்கும்போது வைத்துக்கொள்ள வேண்டிய மற்றும் விலக்க வேண்டியதைக்குறித்த ஞானத்தை அவர் அருளுவார்.

மற்றுமொரு எளிய வழி – கனி கொடுங்கள். எனினும் ஆவிக்குரிய ஆரோக்கியத்தில் நிலைத்திருந்து நமது சாதனங்களை எந்த வழியில் செலுத்த வேண்டுமென தேவன் நமக்கு வழிகாட்ட வேண்டும்.தேவனுடன் ஒத்துழைத்து நமது வாழ்க்கையின் பகுதிகளில் சுத்தம் செய்யும் வேலையை குறையச்செய்யும்போது நீடித்த கனிகள் தர நாம் உறுதியாக இருப்போம். **சுத்தஞ்செய்யும் வேலையை உன்னில் குறைத்து க்கொள்ள உன்னுடைய ஆவிக்குரிய நிலையை எப்படி நீ சரி செய்து கொள்ள முடியும்?**

### தேசத்திற்காக ஜெபியுங்கள் - பேராக் மாநிலம்

- தேவனுடைய இரக்கம் தங்கள் வாழ்க்கைகளில் காண பேராக் மக்களுக்காக ஜெபியுங்கள். 134 புதிய கிராமம்(சீனர்) இந்த மாநிலத்தில் இருந்தாலும் கிறிஸ்தவ சீனர்கள் மிகவும் குறைவு. எல்லா கலாச்சாரங்களையும் கடந்து ஏற்ற விதத்தில் நற்செய்தி இங்கு செல்வதற்கு ஜெபி.
- மலேசியாவின் பெரிய திபெத்திய புத்த கோவில் இங்குதான் உண்டு. வழியும், சத்தியமும், ஜீவனுமான உன்னத தேவனை இங்கு செல்லுகிறவர்கள் அறிந்துகொள்ள ஜெபி.
- நாட்டின் மிகப்பெரிய கடற்படைத் தளம் இங்குதான் உள்ளது. தேவ பிரசன்னம் இந்த தளத்தில் ஒளிவீசுவதாக. கடற்படை வீரர்கள் எல்லைக்குட்பட்ட நீர் பகுதியை விவேக வியூகத்துடன் பாதுகாக்க ஜெபி.

நாள் 25

# தேவ வார்த்தை நம்மில் நிலைத்திருக்கிறது: தேவ வார்த்தை –வாக்கியமும் விசேஷ வெளிப்பாடும்

யோவான் 14ல் கிறிஸ்துவில் நிலைத்திருப்பது என்றால் அவருடைய வார்த்தை நம்மில் நிலைத்திருக்கிறது அல்லது ஜீவிக்கிறது.அப்படியானால் தேவ வார்த்தை என்பது என்ன?

வார்த்தை அல்லது வேதம் 66 புத்தகங்களைக்கொண்டது– தேவன் சொன்னது.அதுமோசே அல்லது தீர்க்கதரிசிகள் எழுதின நியாயப்பிரமாணமோ, படிப்பினையோ, கட்டளையோ, கற்பனைகளோ, வாக்குகளோ, தீர்ப்புகளோ அனைத்தும் தேவனிமிருந்து வந்தவை.

இயேசுவின் காலத்தில் வாக்கியங்கள் எனும் சொல் பழைய ஏற்பாட்டைக் குறிக்கும்.அவை தேவனிடமிருந்து வந்தவை.பரிசுத்தமும் உடைக்கமுடியாததும் நிறைவேறுகிறதாகவும் காணப்படுகிறது.வாக்கியங்கள் இறுதியில் மேசியாவாகிய இயேசு கிறிஸ்துவையே சாட்சி பகருகிறது.

அப்போஸ்தலருக்குள்ளும் ஆதி சபைகளிலும் வாக்கியங்கள் முதன்மை பங்கை வகித்துள்ளன. வேத வாக்கியங்கள் கிறிஸ்து இயேசுவுக்குள் விசுவாசத்தைக்கொண்டு இரட்சிப்புக்கேற்ற ஞானவானாக்கும், உபதேசத்திற்கும் கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும் நீதியைப் படிப்பிக்குதலுக்கும் ஏற்றவை. இன்றுவரை சுவிசேஷ சபைகள் வாக்கியங்களை அதாவது வேதத்தை ஏற்றுக்கொண்டிருக்கின்றன.மேலும்தம்மைப்பற்றிய தேவனுடைய விசேஷ வெளிப்பாடு அதன்வழி ஜீவன், மரணம், கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல், மானிட இரட்சிப்பு.சரித்திரம் கால முழுவதும் வேத வாக்கியம் பயன்பாட்டில் உள்ளது.

இயேசு மரணத்திற்கு முன் தம் சீடர்களின் பலவீனங்கள், உலகத்தில் பகை, சாத்தானுடைய தாக்கம் இவற்றை மேற்கொள்ள நாம் அவரிலும் அவர் வார்த்தை நம்மிலும் நிலைத்திருக்க வேண்டும். கனிதரவும் நாம் அவரது சீடர்கள் என்பதை நிரூபிக்கவும் இதுவே திறவு கோள். **இந்த தேவ வார்த்தைகளை நாம் உயர்வாக மதிக்கிறோமா அல்லது ஏதோ இதுவும் ஒன்று என கருதுகிறோமா?**

### தேசத்திற்காக ஜெபியுங்கள் - ஆளுநர்கள்

- பேரரசர், மலாய் ஆட்சியாளர்கள் அவர்கள்தம் குடும்பத்தினர் மீது தேவ தயவும் இரக்கமும் வெளிப்பட
- மற்றவர்களும் அவர்களை பின்பற்ற ஒரு முன்மாதிரியான வாழ்க்கை அவர்கள் வாழவும் எவ்வித அச்சமுமின்றி எல்லாருக்காகவும் அவர்கள் தைரியமாக பேசவும்
- மக்கள் நலனுக்காக அரச குடும்பத்தின் ஆண்களும் பெண்களும் செயல்படுத்தும் சமூக சேவையின் திட்டங்கள். அவர்களது முயற்சிகள் மென்மேலும் பெருகவும் நேர்மறை பலன்களைக்கொண்டு வரவும்.

நாள் 26

# தேவ வார்த்தை நம்மில் நிலைத்திருக்கிறது: தேவ வார்த்தை இயற்கையான வெளிப்பாடுகள்

இயற்கை, மனித வரலாறு, அறிவியல், கலை இவற்றின் வழியாகவும் தேவன் பேசுகிறார்.அவை வாக்கியங்களால் சொல்லப்படவில்லையென்றாலும் அது தேவனுடைய சிறப்பு வெளிப்பாடுகளும் அவரைக்குறித்து பேசுகிற வெளியரங்க சாட்சிகளுமாய் காணப்படுகின்றன.

அவருடைய வார்த்தையில் நிலைத்திருப்பது என்பது அவரை முழு இருதயத்தோடும் ஆராதனை செய்வதாகும்(மத் 22:37, மாற்கு 12:30, லூக்கா 10:27). இயற்கை தேவனுடைய மகிமையை (சங் 8:,9:1) அவருடைய துதியை (சங் 89:5) அவருடைய நீதியை (சங் 97:6)வெளிப்படுத்துகின்றன.

தேவ வார்த்தை எல்லா கண்டுபிடிப்புகள், எதார்த்தம், பகிரங்கம் இவற்றிற்கு மேலானது.ஏனெனில் சத்தியமானது தமது சாயலாக மனிதரைப்படைத்த, இந்த பூமியில் அடங்கியுள்ள சகலவற்றின் சிருஷ்டிகர்த்தரிடமிருந்து வருகிறது.

பல மத இன தீவிரவாதிகளின் குறுகிய சிந்தை மற்றும் ஞானத்தில் தங்களைக் குருடாக்கிக்கொள்ளக்கூடாது. அல்லது பொது நம்பிக்கை மற்றும் மதிப்புகளால் அலைசடிப்படக்கூடாது.வேதம் மாத்திரமே தேவனுடைய அதிகாரத்திற்குட்பட்டது.அதைக்கருத்தில் கொண்டு இயற்கையை மதிக்கவேண்டிய அவசியமில்லை.மாறாக அனைத்தையும் சிருஷ்டித்து மீட்ட தேவனுக்கு கனமும் தொழுகையும் கொண்டுவர வேண்டும்.அவரின் கட்டளையின்படி தேவனையும் நம் அயலானையும் நேசிக்க வேண்டும்.நமக்கு கொடுத்த சாதனங்களுக்கு உக்கிராணம் காட்ட வேண்டும். அதே சமயம் உலகத்திலுள்ள பயன்பாட்டிற்கு அதிக சிந்தை உள்ளவர்களாகிவிடக்கூடாது.

தொலைந்துபோன உலகத்திற்கு நாம் நம்மைத்தேறினவர்களாக்கி அவருடைய அன்பை, வார்த்தையை, இரட்சிப்பை, மகிமையையை சொல்ல வேண்டும். **உலகத்தில் நல்விளைவைக்கொண்டு வரும்படி துணிவுடன் செயல்பட போதிய புரிந்துணர்வு உனக்கு உண்டா?**

### தேசத்திற்காக ஜெபியுங்கள் - பிரதம மந்திரி

- பல அழுத்தங்களும் சவால்களும் பிரதமருக்கு எதிராக குவிந்து கொண்டு வரும் வேளை யில் நாட்டின் தலைவர் எனும் ஸ்தானத்தில் தனது கடமைகளை சரிவரச்செய்து வர.
- பிரதமரைச்சுற்றிலும் ஞானமுள்ள சரியான தேவ ஆலோசனைகளைக்கொடுக்கிற ஆண்களும் பெண்களும் சூழ்ந்திருக்க
- தேவனுடைய கிருபையையும் இரக்கத்தையும் அவரும் அவருடைய குடும்பத்தாரும் சந்திக்க

நாள் 27

# தேவ வார்த்தை நம்மில் நிலைத்திருக்கிறது வார்த்தையும் ஆவியும்

வார்த்தை மற்றும் கருத்து.இந்த இரண்டினால் நாம் குழப்பமடைகிறோம்.இது கிறிஸ்தவனுக்கும் விளங்காமல் பிதற்றுகிறவனுக்கும் எப்பொழுதும் நடைபெறும். எடுத்துக்காட்டாக உள்ளான மனிதனில் பேசுதல், ஒரு மனிதனில் வெளிச்சம் என்பது என்ன?.அது ஒரு மனிதனில் காணப்படுவதா அல்லது மனசாட்சியா?நடப்பதைப்பற்றிய உள்ளுணர்வா அல்லது கற்பனையா?தேவனும் சொப்பனம் மற்றும் தரிச னத்தில் பேசுகிறவர்தானே?போன்ற விவாதங்கள்.

17ஆம் நூற்றாண்டில் குவேக்கர்ஸ்(நண்பர்கள் எனும் சமயக்கழகத்தினர்) உள்ளூர இருக்கும் கிறிஸ்துவின் உள்ளான வெளிச்சம் அது உள்ளூர வழிகாட்டும், நிச்சயமாக இரட்சிப்பும்தான் என் விவாதித்தனர். உள்ளத் தில் தோன்றும் எண்ணங்களின்மேல் வைத்த விசுவாசத்தில் அதிகமாய் சார்ந்திருந்ததினால் அதிக பாரம்பரிய தொழுகை, வழிபாட்டு முறைமைகளை அவர்கள் நிராகரித்தனர்.

இதன் அடிப்படையில் தவறாமல்.உண்மையோடு. நேர்த்தியாக வாக்கியங்களை மற்றும் .வேதாகம மார்க்கபோதனையோடு நடத்தப்படும் முறைமைகளில் உள்ளார்ந்த எண்ணங்களின் வழி நடத்துதலும் பரிசுத்த ஆவி பேசுகிறதையும் முக்கியப்படுத்த வேண்டும் என புரட்சியாளர்கள் மறுமொழி கொடுக்கின்றனர்.

வேத வார்த்தைகளும் பரிசுத்த ஆவியும் வேதாகமம் முழுவதும் இணைந்தே செயல்படு வதைப் பார்க்கிறோம் ( எபே 3:5, எபி 4:12). வார்த்தை மாத்திரம் இருந்தால் நாம் காய்ந்து விடுவோம்; பரிசுத்த ஆவி மாத்திரம் இருந்தால் நாம் வெடித்து விடுவோம்.இரண்டும் இருந்தால்தான் நாம் வளருவோம் என ஒருவர் ஞானமாய் பதில் உரைத்தார். நாம் இதில் பிரிந்திராமல் எப்பொழுதும் வார்த்தையையும் பரிசுத்த ஆவியையும் இணைத்து விடுவோம்.ஒன்றை விட்டு மற்றொன்றை பிடித்துக்கொள்வது பொய்யானது.நமது வாழ்விலும் ஊழியத்திலும் வேதாகம சத்தியத்தோடு ஆவியினால் வழிநடத்தப்படுவது சாலச்சிறந்தது. **இந்த சம அளவை எப்படி நாம் அமுல்படுத்துவது?**

### தேசத்திற்காக ஜெபியுங்கள் - அமைச்சரவை உறுப்பினர்கள்

- தனித்துவ ரீதியில் தேவனை அறியாவிட்டாலும் தேவ பயம் காணப்பட
- எல்லா மலேசியரும் பயன்பெறும்படி நாட்டின் செல்வத்தை விவேகமாக நிர்வகிக்கவும் சரியான பொருளாதார திட்டத்தை வகுக்கவும்
- அனைத்து தேசிய பாதுகாப்பு தீவிரவாத மிரட்டலுக்கு எதிராக தங்கள் நிலைகளை உறுதிப்படுத்தவும், பெரும்பான்மை இல்லாத பல இன சமயத்தினரின் உரிமைகள் தேய்ந்து போகாதபடி குரல் கொடுக்கவும்
- பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலில் அனைத்து கிறிஸ்தவ அரசியல்வாதிகளும் சந்தர்ப்பம் கிடைக்கும்போது துணிவோடு பேசவும்.



நாள் 28

# தேவ வார்த்தை நம்மில் நிலைத்திருக்கிறது: தேவ வார்த்தையும் வல்லமையும்

தேவன் பேசினார், அகிலம் தோன்றியது.பேசின வார்த்தைகளை அவர் மீட்டுக் கொள்வதில்லை.தேவ வார்த்தை பலனுள்ளது (ஏசா 55:10-12) கிறிஸ்துவின் அற்புத பிறப்பைப்போல சுய நிறைவைக் கொண்டு வருவது (லூக் 1:37).தமது வார்த்தைகளைக்கொண்டு அவர் வாக்குகளை நிறைவேற்றினார் (உபா 9:5).

சில முக்கிய கருத்துகள்: வார்த்தை தேவனுடைய வல்லமையை கொண்டுவருகிறது. இயேசுவின் முன்மாதிரியைப்பின்பற்றி நான்கு சுவிசேஷத்தில் காணப்படுகிறபடி பிரசங்கம் மாத்திரம் அல்ல ஆனால் சாத்தானுடைய பிடியில் உள்ள சுகவீனர்களுக்கு சுகமளிப்பும் விடுதலையும் அளிக்க வேண்டும். கிறிஸ்துவைப்பின்பற்றும் கிறிஸ்தவர்களாகிய நாம், பிரசங்கம், சுகமளிப்பு விடுதலை இவற்றை அனுதினம் தனிப்பட்ட சபை ஊழியங்களில் பயிற்றுவிக்க வேண்டும்.

இன்று பல்வேறு பிரிவுகளைச்சார்ந்த கிறிஸ்தவர்கள், தேவ வார்த்தையிலிருந்து புறப்பட்டு வரும் வல்லமையைக்கொண்டு மன்றாட்டு ஜெபங்களிலும், ஆவிக்குரிய யுத்த ஊழியங்களிலும் நிறைவாய் பயன்படுத்துகின்றனர். சிறியவர்களுக்கும் வறியவர்களுக்கும் அதிகாரங்களுக்கும் அரசியல்வாதிகளுக்கும் வார்த்தையைப் பேசு.

இவற்றின் மத்தியில் நாம் வேத இறையியல் போதனைகளையும் சிந்தைகளில் வளர்க்க வேண்டும்.மற்ற கருவிகள் அல்லது ஆயுதங்களைப்போல சரியாகக் கட்ட பயன்படுத்த வேண்டும்.தவறுதலாக உபயோகிக்கும்போது அது பிரித்து நாசமாக்கிவிடும்.(வார்த்தையினால் பேசி தான் ஏதேனில் சாத்தான், ஆதாம் ஏவாளை வஞ்சித்தான். **தேவ வார்த்தை வல்லமை உள்ளதும், வெறுமனே அது திரும்பாது எனவும் நீ நம்புகிறாயா?**

### தேசத்திற்காக ஜெபியுங்கள் - கூட்டரசு அரசாங்கம்

- நாட்டின் நிர்வாகத்தின் மையமாக கூட்டரசு அரசாங்கம், திறம்பட செயல்பட
- நியாயமான முறையில் நிதி பங்கீட்டை அனைத்து மாநில ஒதுக்கீடுகளில் வழங்க
- மாநில அரசாங்களுக்கு மேம்பாட்டுத்திட்டங்கள் பகிர்ந்தளிக்கும்போது வெளிப்படையான மற்றும் முறையான விதத்தில் வழங்க

நாள் 29

# தேவ வார்த்தை நம்மில் நிலைத்திருக்கிறது: வார்த்தை சுவிசேஷமாக ( 1 ) – உள்ளடக்கமும் செய்தியும்

சுவிசேஷம் தேவ வார்த்தையின் ஒரு பகுதி அல்ல ஆனால் அதுதான் மையம்.சுவிசேஷம் என்றால் நற்செய்தி என்று அர்த்தம்.

சுவிசேஷத்தின் சாரம் பணியாற்றுவது.திருச்சபை தேவ இரட்சிப்பின் பணியை உலகிற்கு நிறைவேற்றும் கருவி.பிதாவால் இயேசு அனுப்பப்பட்டார், நாமும் அதுபோல அவருடைய இரட்சிப்பின் செய்தியை உலகிற்கு கொண்டுசெல்ல வேண்டும்.

நாம் வார்த்தை–மையமாக இருப்பதினால் அருட்பணியை மறந்துவிடுகிறோம்.தேவ வார்த்தை அவருடைய குணங்களையும் இருதயத்தையும் பிரதிபலிக்கிறது.இயேசுவில் வைத்த விசுவாசத்தைக்கொண்டு மனந்திரும்புகிறவர்களுக்கு வாக்குத்தத்தமாக அவருடைய அன்பும் இரட்சிப்பும் மீட்புக்கு ஏதுவாக இருக்கிறது.

தேவன் பரிசுத்தமும் நீதியும் இரக்கமும் உள்ளவர்.எனவே நற்செய்தியின் சாராம்சம் நியாயத்தீர்ப்பும் இரட்சிப்பும் கொண்ட இருபக்கமாகும்.வருந்துபவர்களுக்கு வார்த்தைஇரக்கம் செய்யவும், மனந்திரும்பாதவர்களுக்கு கோபாக்கினை, நியாயத்தீர்ப்பும் வரும்.

தேவனுக்கு ஸ்தோத்திரம். இயேசு கிறிஸ்துவில் நாம் இரட்சிப்பு, மறுபிறப்பு, கழுவப்பட்டு, சுத்திகரிப்பு அடைந்திருக்கிறோம் – பிதாவுக்கு முன்பாக ஒப்புரவாகி நீதிமானாக்கப்பட்டிருக் கிறோம்.எனவே நன்றி செலுத்து வோம்.மற்றசுவிசேஷத்தின் ஆசீர்வாதம் நிறைவாய்ப் பெற உறுதியளிக்கப்பட்டிருக்கிறோம் [ரோமர் 15:29]. **கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும்போது கிடைக்கப்பெறும் பெரிய சுதந்திரத்தை அடைகிறோமா அல்லது அதன் மகத்துவத்தை இழக்கிறோமா?**

### தேசத்திற்காக ஜெபியுங்கள் - மாநில மற்றும் மாவட்ட அரசாங்கம்

- தங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ள மாநிலத்தை திறம்பட நிர்வாகம்பண்ண முதல்வர்களுக்காக ஜெபி
- மாநில, மாவட்ட, ஸ்தல அரசுக்கு நீதி, நேர்மை, திறமை, நியாயம் இவை தூண்களாக இருக்க ஜெபி
- மாநில அளவில் தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் தங்கள் கடமைகளை சரியாய் செய்ய ஜெபி.

நாள் 30

# தேவ வார்த்தை நம்மில் நிலைத்திருக்கிறது: வார்த்தை சுவிசேஷமாக (2) – அருட்பணியும் சுவிசேஷ ஊழியமும்

துவக்கத்திலிருந்து தேவன் இஸ்ரேல் மக்களை அவருடைய அன்பையும் இரட்சிப்பையும் தேசங்கள் ஆசீர்வதிக்கப்பட உலக முடிவு பரியந்தம் எடுத்துச்செல்ல கட்டளையிட்டார் (மத் 28:18; மாற்கு 16:15; லூக் 24:46, யோவான் 20:21; அப் 1:8). கிறிஸ்தவர்கள் மற்றும் அப்போஸ்தலர்கள் மூலம் நற்செய்தி பரவினதை ஆதித்திருச்சபையில் நாம் கண்டோம். இயேசுவின் மரணத்திற்குப்பின் 1ஆம் நூற்றாண்டில் ரோமாபுரி எல்லைக்கு அப்பால் பரவி, ஒரு காலத்தில் கிறிஸ்தவர்களை துன்புறுத்தின ரோம இராஜாங்கம் முழுவதும் 3ஆம் நூற்றாண்டிற்குள் அதிகாரப்பூர்வ கிறிஸ்தவ மக்களாக மாற்றிற்று.

முதல் ஆயிரமாண்டு எதிர்நோக்கையில் சுவிசேஷத்தின் வளர்ச்சியில் இறக்கம் கண்டது.மத்திய காலத்தில் நுழையும்போது ரோமன் கத்தோலிக்க சபைகள் சுவிசேஷத்தின் வல்லமையை புறக்கணித்து மத மற்றும் அரசியல் வல்லமைக்கு முக்கியத்துவம் கொடுத்தது.எனினும் பின்னர் அவர்களுக்குள் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டு கல்வி, சமூக, மருந்த்துவ ரீதியின் வழி அருட்பணி ஊழியம் நிறைவேறினது.

சபைகள் இந்த பெரிய கட்டளைக்கு சுணக்கம் காண்பித்தபொழுது, தேவன் மறுமலர்ச்சியை வேறுவழியில் கொண்டுவந்தார்.ரோமன் கத்தோலிக்க சபை மங்கினபோது எதிர்ப்பு சபைகள் தோன்றி சுவிசேஷம் தொடர்ந்து முன்னேற எழுப்புதல் அலை எழும்பினது.

ஆவிக்குரிய கனி எளிதில் வராது என யோவான் 15 நினைவுபடுத்துகிறது.கிறிஸ்துவின் கிளைகள் ஆரோக்கியமான தொடர்ச்சியாய் கனிகொடுக்க நறுக்கப்படும் செயல்பாட்டை கடந்து செல்ல வேண்டும். நறுக்கப்படும்போது நாம் அனுபவிக்கிற பாடு வேதனை மற்றும் சோதனைகளை நித்திய அன்பின் பிதா நம்மை கவனித்து பராமரிக்கிறார் என காணும் நாம் அவருக்கு நன்றி செலுத்த வேண்டும். **அருட்பணி மற்றும் சுவிசேஷ ஊழியத்திற்கு நம் இருதயம் ஆயத்தநிலையில் இருக்கிறதா?**

**தேசத்திற்காக ஜெபியுங்கள் - நாடாளுமன்ற உறுப்பினர்கள்.**

- தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்க மற்றும் எதிர்கட்சி பிரதிநிதிகள் தங்கள் இருதயத்தில் தேவ பயம் கொண்டு வாக்காளர்களுக்கு சுயநலமின்றி சேவை செய்ய
- தேர்தல் ஆணைய குழு ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தும் பொதுத்தேர்தலை நேர்மையுடனும், தன்னிச்சையாகவும் அதின் நோக்கத்தை நிறைவேற்றும்படி ஜெபி
- அதிகமான கிறிஸ்தவ உறுப்பினர்கள் உப்பாகவும் ஒளியாகவும் இருந்து தெய்வீகமற்ற நடைமுறைகள் மற்றும் கொள்கைகளுக்கு எதிராக குரல் கொடுக்க

நாள் 31

# தேவ வார்த்தை நம்மில் நிலைத்திருக்கிறது: நமக்குள் தேவ வார்த்தை – சங்கீதம் 119

சங்கீதம் 119லிருந்து தியானத்திற்கு ஒரு பகுதி

**1. பரிசுத்தம்-மறுபடியும் நினைவூட்டல்**

தேவ வார்த்தையில் அவர் யார், என்ன செய்கிறார், இரட்சிப்பு, பரிசுத்தம், அவரின் பிரமாணம் கற்பனை இவற்றை மையக் கருப்பொருளாகக்கொண்டு ஜாக்கிரதையுடனும் நோக்கத்துடனும் திரும்பவும் சொல்லப்பட்டிருக்கிறது. தேவன் காட்டும் இலக்கிற்கு தேவ வார்த்தையே வழிகாட்டி எனும் சத்தியத்தை மறுபடியும் நினைவு படுத்துகிறது.

**2. அவருடைய சிருஷ்டிப்பில் தம்மை மேற்கோள்காட்டி பங்கெடுக்கும் தேவன்**

இதின் முதல் வசனத்திலேயே கர்த்தர் அல்லது யாஹ்வே எனும் பதம் –தனிப்பட்ட, தொடர்புடைய உடன்படிக்கை செய்யும் தேவனுடைய நாமம் என்று பொருளில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.அவர் வெறும் வார்த்தையாக அல்லது கட்டளையாக மாத்திரம் அல்ல மாறாக நம் பக்கமாய் வந்து நாம் அதனை செயல்படுத்த வல்லமை அருளுவதாக உள்ளது.

**3. அவர் வார்த்தை உண்மையான மகிழ்ச்சியை ஏற்படுத்துகிறது.**

நேசிக்கும் தகப்பனாக இருக்கும் தேவன் தம் பிள்ளைகள் உண்மையான மகிழ்ச்சியில் இருப்பதைக் காண விரும்புகிறார்.எனினும் தேவ வார்த்தை இல்லையெனில் உண்மையான மகிழ்ச்சியை அடைய முடியாது. அவருடைய வார்த்தையில் நிலைத்திராவிட்டால் நல்ல கிறிஸ்தவர்கள் கூட மகிழ்ச்சியாக இருக்க முடியாது. சங் 119 முதல் எட்டு வசனங்கள் எபிரெய மொழியின் முதல் எழுத்தாக இருப்பது உண்மையான மகிழ்ச்சியும் பரிசுத்தமும் ஒன்றையொன்று கைகோர்த்துச் செல்லுவதை புலப்படுத்துகிறது.

**சங் 119 வாசித்து தேவன் உன்னோடு பேச இடங்கொடு**

**தேசத்திற்காக ஜெபியுங்கள் - கூட்டரசுப்பிரதேசம், கோலாலம்பூர், லாபுவான், புத்ராஜெயா.**

- நீதியின் ஜனங்களாகிய ஆண்களும் பெண்களுமாக நுழை வாசலில் அமர்ந்து தேசத்தை நீதியினால் உயர்த்தவும் ஆசிர்வாதம் கொண்டுவரவும்.
- தேவன் கூட்டரசுப்பிரதேச மக்களின் வாழ்க்கையில் வல்லமையாக தம் பிரசன்னத்தினால் இடைபட்டு, அவர்களின் அனுதின நடவடிக்கைகளில் புரட்சி மாற்றங்கள் ஏற்படுத்த. அம்மாநிலத்தின் சபைகள் அங்கு நல்விளைவைக்கொண்டுவர
- நிலத்தின் மீட்புப் பணி வெளிப்படுத்தப்பட்டு எல்லா மக்கள் பிரிவினருக்கும் நன்மை கொண்டுவர.

நாள் 32

# நிலைத்திருப்பதின் வல்லமை
# குமாரன் பிதாவை சார்ந்திருக்கிறார்

**நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்.யோவான் 15:7**

**நான் பிதாவிலும், பிதா என்னிலும் இருக்கிறதை நீ விசுவாசிக்கிறதில்லையா?நான் உங்களுடனே சொல்லுகிற வசனங்களை என் சுயமாய்ச் சொல்லவில்லை; என்னிடத்தில் வாசமாயிருக்கிற பிதாவானவரே இந்தக் கிரியைகளைச் செய்துவருகிறார். யோவான் 14:10**

இயேசு முழு மனிதன், முழு தேவன்.இயேசு முழு தேவனாக பிதாவுக்கு சமமானால் ஏன் பூமியில் அவருடைய ஊழியத்திற்கு இன்னும் பிதாவின் ஒத்தாசை அவசியப்படுகிறது?

இயேசு பூமிக்கு இறங்கி வரும் முன் பிதாவின் மடியில் வீற்றிருந்தார்(யோவான் 1:18). அவர் பூமியில் இருந்த நாட்களில் பிதாவோடு சரீரப்பிரகாரமாய் பிரிந்திருந்தாலும் தன்னிச்சையாய் செயல்படாமல் பிதாவையே சார்ந்திருந்து எப்பொழுதும் அவருடன் சம்பாஷணையில் ஈடுபட்டிருந்தார். அது அவர்கள் மத்தியில் அணுக்கமான உறவைக்காண்பிக்கிறது.

பிதாவுடைய அன்பின் உறவில் கிடைக்கப்பெறும் ஆவிக்குரிய அதிகாரத்தையும் வல்லமையையும் வேறுபடுத்த முடியாது.பிதா இல்லாமல் மனுஷகுமாரன் வல்லமை அற்றவராக இருப்பார் (யோவான் 5:19). **அவருடைய சீடர்களாய் இருக்கிற நாம் அவர் நம்மை அழைத்திருக்கிற ஒவ்வொரு ஊழியத்திற்கும் அவரைச் சார்ந்திருக்கவேண்டும்.**

### தேசத்திற்காக ஜெபியுங்கள் - சபா மாநிலம்

- மாநில கிறிஸ்தவ மகன்கள் மத்தியில் ஒற்றுமைக்காகவும் அவசர வேளையை உணரவும்,எழும்பவும் ஜெபி. மலேசியா நாடு உருவானபோது பறைசாற்றின உரிமைகளை பூர்வீகக்குடியினர் அறிந்து கொள்ள.
- தீவிரவாதிகளின் ஊடுருவலில் ஏற்படும் எல்லை தாக்குதல் பாதுகாப்பிற்காகவும் ஜெபி. போலீஸ், ரேலா, இராணுவம் தாங்கள் கடமைகளை சிறப்பாய் செய்ய. கள்ளக்குடியேறிகள் விவகாரம் தொடர்பான எதிரான அணுகுமுறையில் அரசாங்கம் விவேகமாய் செயல்பட
- தேசப்புறங்களில் மேம்பாட்டுத்திட்டங்கள் (சாலை, மின்சாரம், நீர் போன்றவை) சரியாய் அமுல்படுத்த.

# நாள் 33

# நிலைத்திருப்பதின் வல்லமை
# நீ விழித்திருக்கிறாயா?

**நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்; ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது என்றார். மத் 26:41**

கெத்சமனே தோட்டத்தில் இரவு நேர நிசப்தமான வேளையில் ஆண்டவருடைய ஒரு வேதனைக்குரலில் ஜெபம்.உமக்கு சித்தமானால் இப்பாத்திரம் என்னை விட்டு நீங்கட்டும்.ஆகிலும் என் சித்தமல்ல. உம் சித்தத்தின்படியே ஆகக்கடவது.வியர்வை இரத்தத் துளிகளாய் தரையில் விழுந்தது.அந்த பரம வேதனையில் தேவதூதர்கள் வந்து அவருக்கு பணிவிடை செய்த போதிலும் பாடுகளின் பாத்திரம் நீக்கப்படவில்லை.

அவருடைய சீடர்களோ தங்கள் எஜமான் வேண்டுதல் செய்கிற வேளையில் நித்திரை மயக்கத்தில் இருந்தனர்.மூன்று முறை எழுந்து ஜெபிக்க அவர்களை இயேசு எழுப்பினார்.இறுதியாக இயேசுவை கைது செய்ய காவலர்கள் வந்தனர்.அவர் அதனை எதிர்க்கவில்லை.ஏனெனில் அது பிதாவின் சித்தம் என அவர் நன்கு அறிந்திருந்தார்.

அடுத்த சில மணி நேரங்களில் ஒருவன் அவரை மறுதலித்தான், இன்னொருவன் தற்கொலை செய்துகொண்டான் மற்றொருவன் எஜமானனுக்குக் கிடைக்கும் அதே தண்டனை தனக்கும் கிடைக்கும் என பயந்து ஒளிந்து கொண்டான். ஜெபத்தில் தரித்திருக்கிறவர்கள் மாத்திரமே சோதனையை மேற்கொள்ளமுடியும் எனும் இயேசுவின் வார்த்தை நிரூபனமானது. இயேசுவை காப்பாற்ற லேகியோன் எண்ணிக்கையில் தூதர்கள் ஆயத்தமாக இருந்தனர் ஆனால் இயேசுவோ சோதனையில் அகப்படவில்லை.ஏனெனில் அவர் ஜெபத்தில் யுத்தம் செய்தார். தமது சரீரத்தை உலக மானிட இரட்சிப்புக்காக சிலுவையில் அழித்துக்கொள்ள இடங்கொடுத்தார். **நீ ஆவிக்குரிய நித்திரையில் கிடக்கிறாயா?அல்லது உன் ஜெபத்தில் விழித்திருந்து தரித்திருக்கிறாயா?**

### தேசத்திற்காக ஜெபியுங்கள் - கல்வி அமைச்சு

- தேவ ஆவியின் ஞானம், ஆலோசனை, புரிந்துணர்வு கல்வி அமைச்சின்மேல் இருக்க. கல்வி அமைச்சர், கொள்கை வரைபவர்கள், பாடத்திட்டம், பள்ளி முதல்வர்கள், பயிற்சியாளர்கள், ஆலோசகர்கள், ஒழுங்கு நடவடிக்கை ஆசிரியர்கள், பள்ளி வாரியம் மற்றும் பெற்றோர் ஆசிரியர் சங்கம். இவர்களுக்காக ஜெபி.
- தேவ மதிப்பீட்டுத் தன்மைகளை உட்புகுத்தி நன்கு விளையச்செய்யும் ஆரோக்கியமான வாழ்க்கைத்தரத்தையும் பழக்கங்களையும் மனப்போக்கையும் உருவாக்குகிற மாணவர்களை வகைப்படுத்துகிற பாட நிகழ்வுகளை தயார் பண்ண
- உள்புற பகுதியில் வாழும் பிள்ளைகளின் கல்விக்காக கல்வி அமைச்சு அதிக நிதி ஒதுக்கீடு செய்ய ஜெபி.

நாள் 34

# நிலைத்திருப்பதின் வல்லமை
# மறைவான இடங்கள்; சிறிய ஆரம்பங்கள்

**பின்பு அவர் அவனைத் தள்ளி, தாவீதை அவர்களுக்கு ராஜாவாக ஏற்படுத்தி, ஈசாயின் குமாரனாகிய தாவீதை என் இருதயத்துக்கு ஏற்றவனாகக் கண்டேன்; எனக்குச் சித்தமானவைகளையெல்லாம் அவன் செய்வான் என்று அவனைக்குறித்துச் சாட்சியுங் கொடுத்தார்.– அப் 13:22**

இராஜாவாகிற எந்தத் தகுதியும் வாலிபன் தாவீதுக்கு இல்லை. மேய்ப்பனாயிருந்த இந்த சிறுவன் கவன் வைத்து வீசுகிற பயிற்சியோடு ஆண்டவருக்கு பாடல்கள் பாடிக் கொண்டிருக்கும் வேலைதான் செய்யமுடிந்ததே தவிர தன் சகோதரர்களைப்போல கட்டுமஸ்தான சரீரத்தோடு இராணுவத்தில் இல்லை. வெளித்தோற்றத்தில் பார்க்கும் போது இவன் ஒரு நாள் தேசத்திற்கே மேய்ப்பனாகும் அடையாளம் எதுவும் அப்போது இல்லாதிருந்தது.

ஜெசியின் பிள்ளைகளில் ஒருவனை இராஜாவாக அபிஷேகம் பண்ணுவதற்கு சாமுவேலை தேவன் பணித்தபோது, வெளித்தோற்றத்தைப்பார்க்காதபடி உள்ளான தகுதியைப் பார்க்கும் படி தேவன் பணித்தார்.

உள்ளான இருதயத்தின் பயிற்சியைப் புறக்கணித்து வெளித்தோற்றத்தை கவருகிறது உலகம்.சிறுபிராயத்தில் தன்னையே தேவனை ஆராதிப்பதிலும் அவருக்குள் இருதயம் பலப்படுவதிலும் நேரம் செலவழித்தான் தாவீது. அவனுடைய சரீர வடிவமோ அல்லது வீரனுக்குரிய தன்மைகளோ கோலியாத்தை ஜெயிக்கும்படி செய்யவில்லை **மாறாக மறைவாய் இருந்தவையே அவனை பெரியவனாக்கிற்று.**

## தேசத்திற்காக ஜெபியுங்கள் - துவக்கப்பள்ளிகள்

- பாலர் பள்ளிகள் நடத்துகிறவர்கள் ஆசிரியர்கள் பிள்ளைகளின் பாதுகாப்பு, நலன், சம அளவு வளர்ச்சி இவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்க. பள்ளிகளை நடத்துவதற்கு ஏதுவான அடிப்படை களையும் தகுதிபெற்றவையாய் இருப்பதற்கு கல்வி அமைச்சு உறுதி செய்யவும். கிறிஸ்தவ கல்வி மையங்கள் அர்சாங்கத்தின் தயவு பெற.
- தேவையற்ற கல்விப்பாடங்களை திணிக்காமல் பிள்ளைகளின் முழுமையான வளர்ச்சி பெற பெற்றோர் கவனிக்க. கல்வி கற்க இயலாத, திறன்கள் அற்ற குறைபாடுகளை துவக்கத்திலேயே அடையாளங்கண்டு தீர்வு காண. பிள்ளைகளும் நம்பிக்கையுடன் வளர்ந்து தங்கள் திறன்களை வெளிக்கொணரவும் பாதுகாப்பான சூழலில் மகிழ்ச்சியுடன் வளரவும்.
- சிறுபிள்ளைகள் இருதயத்தில் பலமான ஆவிக்குரிய அஸ்திபாரங்களை போட கிறிஸ்துவின் மெய்த்தன்மைகளை புத்தாக்கத்துடனும் ஆர்வமுடனும் கற்றுக்கொடுக்க கிறிஸ்தவ பாலர் பள்ளிகள் முன்வர.

நாள் 35

# நிலைத்திருப்பதின் வல்லமை
# திடன்கொண்ட யுத்த வீரன்

**யோசுவா 1:9ல் பயப்படாதே என்ற உற்சாக சொல் முதன்முறையாய சொல்லப்பட்ட வார்த்தை அல்ல. உபா 31:6-8ல் மோசேயும் இஸ்ரேல் ஜனத்திற்கு முன்பாக இதே வார்த்தையைத்தான் கூறுகிறார். திடன் கொண்ட ஒரு வீரனுக்கு திரும்பத்திரும்ப வீர வசனங்கள் கூற அவசியமில்லையே.**

பழைய ஏற்பாட்டின் சிறந்த யுத்த வீரன் தான் யோசுவா.இஸ்ரவேல் சரித்திரத்தில் பயிற்சிபெற்ற ஒரு வீரனாக அவன் திகழ்ந்தான்.வாக்குபண்ணப்பட்ட தேசத்திற்கு செல்ல அங்கு ஏற்கனவே குடிருக்கும் ஜனத்தாரை போராடி ஜெயித்துதான் நுழையவேண்டும்.சில சமயங்களில் அவன் அஞ்சாநெஞ்சன், பயமற்றவன் என்று நாம் நினைத்தாலும் அவனும் பயந்த நிலையிலிருந்து போராடினான் என்றுதான் பார்க்கிறோம்.

அவன் பயந்திருந்தாலும் தன் இருதயத்தைத் திடப்படுத்தி அவருடைய பிரசன்னத்தில் சொல்லப்பட்ட வாக்கினை நிறைவேற்ற சித்தம் கொண்டான்.துவக்க முதல் இறுதி வரை சேனைகளின் தேவன் அவனுடைய பலத்திற்கு மூல ஆதாரமாக இருந்தார்.விசுவாசத்தில் நாம் முன்செல்லும்போது தேவன் நம்மோடிருப்பதினால் நாம் பயப்படத்தேவையில்லை. **உன்னைப்பின்னுக்குத்தள்ளுகிற பயங்கள் யாவை?**

### தேசத்திற்காக ஜெபியுங்கள் -சமய விவகார அமைச்சு

- கூட்டரசு சாசனத்தில் உள்ள சமய உரிமைகள் நிலைநிறுத்தப்பட ஜெபி.
- சமய வெறிகளுக்கு எதிராக பேசும் தலைவர்களுக்கு தேவன் தெய்வீக பாதுகாப்பும் தைரியமும் தர
- நாளுக்குநாள் சமய உரிமைகளுக்கு எதிராக வரும் சவால்கள் கூடிக்கொண்டு போகிறதினால், தேவன் இடைபட்டு விடுதலை தருகிற அதே வேளையில் கர்த்தருடைய ஜெபம் மற்றும் மலைப்பிரசங்கத்தின் தன்மைகள் வெளிப்பட
    (அ). அவருடைய நாமம் பரிசுத்தப்பட .அவருடைய இராஜ்ஜியம் வர, அவர் சித்தம் பரமண்டலங்களில் செய்யப்படுவதுபோல பூமியிலும் செய்யப்பட.
    (ஆ). மலைப்பிரசங்கத்தில் இயேசு சொன்னபடி, உங்களை உபத்திரவம், மட்டப்படுத்தும்போது, சவால்கள் குவியும்போது மனமகிழ்ச்சியுடன் எதிர்கொள்ள

நாள் 36

# நிலைத்திருப்பதின் வல்லமை உபவாசமும் விருந்தும்

**ஸ்திரீகளிடத்திலே பிறந்தவர்களில் யோவான்ஸ்நானனைப் பார்க்கிலும் பெரியவன் ஒருவனும் எழும்பினதில்லை; ஆகிலும், பரலோகராஜ்யத்தில் சிறியவனாயிருக்கிறவன் அவனிலும் பெரியவனாயிருக்கிறானென்று உங்களுக்கு மெய்யாகவே சொல்லுகிறேன். மத்தேயு 11:11**

யார் இந்த யுதேயா வனாந்திரத்தில் காணப்பட்ட மனிதன்?ஒட்டக மயிரினால் உடை தரித்த இவனைப் பார்க்க வந்த மனிதர்கள் கேட்ட கேள்வி?அவன் ஆலயத்தில் பிரசங்கம் செய்கிற பரிசேயனோ சதுசேயனோ அல்ல ஆனால் அவன் பிரசங்கத்தின் வார்த்தைகள் மனந்திரும்பும்படி குத்துகிறதாய் இருந்தது.வனாந்திரத்தில் பேசுகிறவனுடைய குரல் எனறு ஏசா 40:3 வர்ணிக்கிறது. அவன் மாளிகையில் குடியிராமல் வனாந்தரத்தில் உபவாசித்து ஜெபித்து நியாயப்பிரமாணத்திலும் தீர்க்கதரிசிகளிலும் மகிழ்ந்து, மேசியாவின் வருகைக்கு ஆயத்தப்பட்டிருந்தான்.

யோவான் ஸ்நானகனின் முடிவும் மத்தேயுவில் சொல்லப்பட்டிருக்கிறது.ஏரோது மன்னன் மற்றும் அவன் மனைவிக்கு எதிராக பேசினதினால் கொலைசெய்யப்பட்டான். அவன் நித்தியத்தின் சத்தியத்திற்கு ஊறிப்போனவனானபடியால் சரீர மரணத்திற்கு பயப்படவில்லை. உலகம் தரக்கூடிய சொகுசை இவன் வனாந்திரத்தில் பெற்றான்.கிறிஸ்துவிடமிருந்து அத்தனை பெரிய நற்சாட்சியை பெற அவன் என்ன செய்தான்?நித்தியத்தின் மகிழ்ச்சியில் நிலைத்திருக்க அவன் உலகத்தின் ஆசாபாசங்களை உதறித்தள்ளினான்.கிறிஸ்து மரித்தார், கிறிஸ்து உயிர்த்தார், கிறிஸ்து திரும்ப வருவார். **மேசியாவின் 2ஆம் வருகையை எதிர்கொள்ளும் ஆயத்தத்திற்கு ஏற்ப உன் ஜீவியம் காணப்படுகிறதா?**

### தேசத்திற்காக ஜெபியுங்கள் -பொருளாதாரம்

- ஊழல் மோசடி கலாச்சாரம் அரசியல், அரசாங்கம் மற்றும் சுற்றுப்புறச்சூழலில் இருந்து தேவன் அதனை அகற்றும்படி
- பயனீடு, பொருள் செல்வம் மற்றும் சைபர் உலகம் இவற்றிலிருந்தும் இதன் தாக்கத்திலிருந்தும் மனிதர்கள் விடுபட தேவன் அருள் புரிய
- உலக லவ்கீக ஆவியிலிருந்து சபைகள் விடுபட்டு தேவனுடைய வழிகளில் நிற்க. சொகுசிலிருந்து ஆவிக்குரிய மாற்றம் அடைந்து தங்கள் வேலை ஸ்தலங்களில் சிறந்த முறையில் பணியாற்றி ராஜாதி ராஜனை ஆராதிக்கிறவர்களாக கிறிஸ்தவர்களாக விளங்க.

# நாள் 37

# நிலைத்திருப்பதின் வல்லமை
# சுதந்தரம்

**தீர்மானத்தின் விவரம் சொல்லுவேன்; கர்த்தர் என்னை நோக்கி: நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜநிப்பித்தேன்; என்னைக் கேளும், அப்பொழுது ஜாதிகளை உமக்குச் சுதந்தரமாகவும், பூமியின் எல்லைகளை உமக்குச் சொந்தமாகவும் கொடுப்பேன்; சங் 2:7-8**

இந்த வசனங்களை நாம் அநேகந்தரம் கேட்டிருக்கிறோம்.யுத்தபணிக்கென தங்கள் இருதயத்தை ஊற்றிவிட்டவர்களின் குரல்.வேறு ஏதாகிலும் அர்த்தம் உண்டா?பிதாவாகிய தேவன் தாவீதின் சுதந்தரவாளியாகிய தன் குமாரனாகிய இயேசுவினிடம் பேசப்பட்ட தீர்க்கதரிசன வார்த்தைகளோ?நீர் என்னுடைய குமாரன், என்னைக் கேளும், அப்பொழுது --- உமக்குச் சுதந்தரமாக கொடுப்பேன்.

குமாரர்களும் குமாரத்திகளும்தான் சுதந்தரத்தைப்பெறுவர்.வேலையாட்களும் வீரர்களும் சம்பளம் பெறுவர்.தேவனுடைய பிள்ளைகளாக அடையாளம்பெற்று வாழுகிற நாம், அவருக்கு ஊழியம் செய்வது மகிழ்ச்சியும் சிலாக்கியமுமாகும்.ஏனெனில் அவருக்கு உரிய அனைத்தும் நமக்கு உரியவைகளாகும் (லூக் 15:31).

இதை அறிந்த நான் ஒரு வெகுமதியை சம்பளமாக திரும்ப பெறும் நோக்கத்தில் இனியும் நான் ஜெபிப்பதில்லை. ஒருநாள் இயேசு திரும்ப வரும்போது அவருடைய சுதந்தரத்தில் நான் பங்கடைவேன்.இப்பொழுதோ நான் ஜெபிப்பதும் இயேசுவோடு உழைப்பதும் இந்த உலகத்தில் ஜனங்களுடைய இரட்சிப்புக்காகவே.இறுதியில் கிறிஸ்துவே இராஜாவும் தேசங்களை ஆளுகிறவருமாகிறார். **நம்மையும் கடந்து தேவனிடம் தேசங்களைக் கேட்போமா?**

## தேசத்திற்காக ஜெபியுங்கள் - நிதி அமைச்சு

- மனசாட்சியற்ற ஏமாற்றுத்தனத்தை கையாளும் தனித்துவ, கட்சி சார்பில், செயல்படுத்தப்படும் எந்தவித சுரண்டலையும் நாட்டின் நிதியை / வரிசெலுத்துபவரின் பணத்தைக் காலியாக்குகிற வேலைப்பாட்டையும் தேவன் சுத்தப்படுத்த. அணுக்கமான நிதி நிர்வாகம் மற்றும் ஓட்டை, ஊழல் தவறான பயன்பாடு இல்லாதபடி ஜெபி
- மற்ற பல தேசங்களில் காணப்படும் நிதி சுமை போல எதிர்கால சந்ததியினரை பாதிக்காத விதத்தில் நாடு கடனாளியாகாமல் இருக்க ஜெபி.
- விவேகமாய் செலவு செய்யவும், மேம்பாட்டிற்கும் நாட்டின் வளப்பத்திற்கும் முதலீடுகள் செய்வதற்கும்

நாள் 38

# நிலைத்திருப்பதின் வல்லமை
# பரிசுத்த ஆவி அளிக்கும் அதிகாரம்

**அன்றியும், அவர் அவர்களுடனே கூடிவந்திருக்கும்போது, அவர்களை நோக்கி: யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானங்கொடுத்தான்; நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள்.. ஆகையால் நீங்கள் எருசலேமை விட்டுப் போகாமல் என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள் என்று கட்டளையிட்டார்.அப்:1:4-5**

இயேசுவின் கிருபாதாரபலி சிலுவையில் முடிவுற்றது ஆனால் அது கதையின் இறுதி அல்ல. எருசலேம் இன்னும் ரோமர் ஆட்சியில் இருக்கிறது.இயேசு பரமேறுவதற்கு முன்பாக அவரின் சீடர்கள் கேட்கிறார்கள். இக்காலத்திலா ராஜ்யத்தை இஸ்ரவேலுக்குத் திரும்பக் கொடுப்பீர் என்று.அவரின் பதில் 3 அம்சங்களைத்தாங்கி வருகிறது.

1. பிதாவுக்கடுத்தவைகளை அறிந்து கொள்வது அவர்களின் காரியமல்ல
2. பரிசுத்த ஆவியின் மூலமாக இராஜ்ஜியம் பெருகும்
3. எருசலேமில் மாத்திரமல்ல, யூதேயா, சமாரியா பூமியின் முடிவு பரியந்தம்

பரிசுத்த ஆவியின் அபிஷேகம் இல்லாத மேலறையின் சீடர்களுடைய ஜெபக்கூட்டம் ருசியற்ற நிலையில் இருந்திருக்கும்.ஆனாலும் அவர்கள் விசுவாசத்தோடு காத்திருந்து போது அக்கினிமயமான பிரிந்திருக்கும் நாவுகளைப்போல அவர்கள் மேல் வந்து இறங்கினார்.எழுப்புதலின் தீ எருசலேமிலே வந்து 3000 பேர்கள் தங்கள் வாழ்க்கையை பரிசுத்த ஆவியின் உணர்த்துதலோடு இயேசுவுக்கு ஒப்புக்கொடுத்தனர்.அது ஜெபிப்பதின், அவரைச் சார்ந்திருக்கிறதின் மூலமாய், சபை அடைந்த இராஜ்ஜியத்தின் ஒரு முன்ருசி.இயேசு திரும்ப வரும் நேரம் குறிக்கப்பட்டதற்கு முன்னதாகபரிசுத்த ஆவி நிரம்பின சபைகள் பூமியை சிறைபிடிப்பதற்காக வைக்கப்பட்டிருக்கிறது. **பிரதான கட்டளையை நிறைவேற்ற பரிசுத்த ஆவி நமக்கு அளித்திருக்கும் வல்லமை அதிகாரத்தை நாம் சார்ந்திருக்கிறோமா?**

### தேசத்திற்காக ஜெபியுங்கள் -பல்கலைக்கழகங்கள்

- விரிவுரையாளர்கள் / கற்றுக்கொடுப்போருக்குக்கு ஞானமும்எல்லா இன, சமய நம்பிக்கை உள்ளவர்களை இகழாமல் ஏற்றுக்கொள்ளவும் கற்றுக்கொடுக்கும் தங்கள் அழைப்பை அர்ப்பணிப்போடு நியாயத்தோடு நெறியோடு செய்ய
- முதல் ஆண்டு மாணவர்கள் மனபலம், அழுத்தங்களை, மாற்றங்களை மற்றும் தனிமையைக் கையாள
- கிறிஸ்தவர்கள், இருவகை கடமைகளைச் செய்ய அதாவது சிறப்பாக படிக்க, வேத வசனத்தை புரிந்துகொள்ள. மற்ற சக மாணவர்கள் தரும் அழுத்தங்களை மேற்கொள்ளவும், தங்கள் சாட்சிகளை காத்து மற்றவர்களுக்கு முன்மாதிரியாக ஜீவிக்க



நாள் 39

# என் அன்பில் நிலைத்திரு சிலுவை

**பிதா என்னில் அன்பாயிருக்கிறதுபோல நானும் உங்களில் அன்பாயிருக்கிறேன்; என்னுடைய அன்பிலே நிலைத்திருங்கள்யோவான் 15:9**

அவருடைய அன்பில் நிலைத்திருக்கும்படியும் அதிலிருந்து விலகிச்செல்லாதபடியும் இருக்க இயேசு விரும்புகிறார். சிலுவைதான் தேவ அன்பை மிகவும் அருமையாக புலப்படுத்துகிறது.

தன் ஜீவனை வலியவந்து கோர சிலுவையில் பலியாய்க்கொடுத்த தேவ குமாரன், பரிசுத்த தேவனுடைய கோபாக்கினையிலிருந்து நம்மை தப்புவிக்க உன்னதமான, பரிசுத்த பலியாகி அந்த அன்பை காண்பித்தார். அதை அறிகிறபோது அந்த அன்பானது நமது முரட்டாட்டம், சுயநலம், வைராக்கியம் தேவ அன்பிற்கு முரண் யாவையும் அதில் உருகச்செய்கிறது.நம் இருதயத்தை அவருக்கு திறந்து கொடுக்கும்போது அந்த அற்புத அன்பு நம்மில் ஒரு பகுதியாக இடம்பெறுகிறது.

இந்த அன்பில் நிலைத்திருப்பதற்கு நற்செய்தியின் சத்தியத்தை நாம் பற்றிக்கொள்ள வேண்டும்.மற்ற எந்த வகை நீதியைக் காண்பித்தும் அவ்வகை கிருபையை இழந்துவிடக் கூடாது.நமது கிரியைகளினால் தேவ நீதியையும் அன்பையும் நாம் சம்பாதிக்க முடியாது. சிலுவையில் செய்த கிறிஸ்துவின் கிரியையில் மாத்திரமே நாம் முழுமையாக சார்ந்திருக்க வேண்டும்.நமது கிரியைகள் இரட்சிப்பினாலே நடப்பிக்கப்படுகிறதே அன்றி வேறு வகையில் ஒன்றும் அல்ல.தேவ அன்பில் நிலைத்திருப்பதற்கு இதை நாம் தொடர்ந்து விசுவாசிக்க வேண்டும். நற்கிரியைகளை செய்வதற்கு நாம் விசுவாசத்தினாலே கிருபையைக்கொண்டு இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் (எபே 2:8-10). **இந்த அற்புத நற்செய்தியின் சத்தியத்தை நாம் தொலைத்துவிட்டோமா?**

**தேசத்திற்காக ஜெபியுங்கள் - கல்விக்கூடங்கள்**

- அர்ப்பணிப்பு மிக்க ஆசிரியர்கள் நம் நாட்டின் கல்வி தரத்தை உயர்த்த கற்றுக்கொடுக்கும் மனது இருக்க ஜெபி
- கல்விக்கூடங்களில் கிறிஸ்தவ ஐக்கியங்கள் செழித்தோங்கவும் அவை மற்ற மாணவர்கள் வாழ்க்கையில் குறிப்பிட்ட தாக்கங்களை கொண்டு வரவும் ஜெபி.
- நாட்டுப்புறங்களில் இன்னும் அதிக இடைநிலை பள்ளிகள் ஸ்தாபிக்கப்படவும் அனைத்து மாணாக்கர்களுக்கும் கல்வி போய்ச்சேர வழி வகுக்க.

# நாள் 40

# என் அன்பில் நிலைத்திரு கீழ்ப்படிதல்

**நான் என் பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு அவருடைய அன்பிலே நிலைத்திருக்கிறதுபோல, நீங்களும் என் கற்பனைகளைக் கைக்கொண்டிருந்தால், என்னுடைய அன்பிலே நிலைத்திருப்பீர்கள்.யோவான் 15:10**

கிறிஸ்துவின் அன்பில் நிலைத்திருப்பதற்கு கிறிஸ்துவின் சுவிசேஷத்தின் சத்தியத்தை நாம் பற்றிக்கொண்டிருக்கவேண்டும் என நேற்று கவனித்தோம்.இன்று மேற்சொன்ன வசனத்தில் கிறிஸ்துவின் அன்பில் நிலைத்திருப்பதற்கு இன்னொரு காரியம் செய்ய வேண்டும். – அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்

யோவான் 14:21ல் ன் கற்பனைகளைப் பெற்றுக்கொண்டு அவைகளைக் கைக்கொள்கிறவனே என்னிடத்தில் அன்பாயிருக்கிறான், என்னிடத்தில் அன்பாயிருக்கிறவன் என் பிதாவுக்கு அன்பாயிருப்பான்; நானும் அவனில் அன்பாயிருந்து, அவனுக்கு என்னை வெளிப்படுத்துவேன் என்றார். நாம் தேவனிடத்தில் அன்பு கூர்ந்தால் அவருக்குக் கீழ்ப் படிவோம்.நாம் ஒருவரை நேசித்தால் அவருக்குப் பிரியமானதைச்செய்வோம் என்பது பொது வான ஒன்று.மறுபக்கம், கீழ்ப்படியாமை ஒரு உறவையே துண்டித்துப்போடும்.உண்மை என்னவென்றால் நாம் தேவனுக்கு கீழ்ப்படியாமல் அவரிடம் அணுக்க உறவாய் இருக்கிறோம் என்று சொல்ல முடியாது.

தேவனிடத்தில் அன்பின் ஆழம், இயேசு கிறிஸ்துவினால் சிலுவையில் கிடைக்கப்பெற்ற இரட்சிப்பின் வல்லமை, இவற்றை கீழ்ப்படிந்த கிறிஸ்தவனால்தான் அனுபவிக்க முடியும்.ஒவ்வொருமுறையும் அவருடைய சத்தத்துக்கு செவிகொடுத்து, சித்தத்தை செய்துமுடிக்கும்பொழுது, அவரை அறிகிற அறிவில் ஆழமாக வளருகிறோம்.இயேசு திரும்பத் திரும்ப ஒருவரையொருவர் நேசியுங்கள் என்று கட்டளை கொடுத்துள்ளார்.அவருடைய சரீரமாகிய திருச்சபையின் குணங்களை விவரிப்பது, அவரது அன்பாக இருக்க வேண்டும் என விரும்புகிறார். **தேவ அன்பிற்கு மறுமொழியாக கீழ்ப்படிதலை நடப்பிக்கிறாயா?**

### தேசத்திற்காக ஜெபியுங்கள் - ஜொகூர் மாநிலம்

- இஸ்கண்டார் திட்டம் நிறைய வேலை வாய்ப்புகளை உருவாக்கி, வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவும் தேசத்தின் பொருளாதார உந்துதலாக இருக்கவும் ஜெபி. தேசிய மேம்பாட்டில் இந்தத்திட்டத்தின் வெற்றிக்கு இழுக்காக பேராசையும் ஊழலும் இல்லாதபடி ஜெபி.
- மாநிலத்தை நடத்தும் அதிக செல்வாக்கு சுல்தானுக்கு இருக்கிறபடியால் அவருடைய இருதயத்தை தேவன் தொடவும், தேவ பயத்தில் நிர்வாகம் நடக்கவும், நேர்மையையும் மக்கள் நலனை முன்பாக நிறுத்தி செயல்படவும்
- மந்திரி பெசார் மற்றும் மாநில அரசாங்கத்திற்காக ஜெபி. சிங்கப்பூருடனான நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளபடியால் நல்ல கொள்கைத் திட்டங்களுடன் மாநில மேம்பாட்டிற்காக பாடுபட.

# நன்றி நவில்தல்

## சிறப்பு படைப்பாளர்களுக்கு

- மெய்யான திராட்சை செடியில் நிலைத்திரு – கனம் டாக்டர் பிலிப் கோ
- கொடி – பேராசிரியர் ரோப்பி சிமுஞ்
- கனி – பேராசிரியர் லீ இயுவ் மெங்
- நறுக்குதல் – கனம் டாக்டர் லிம் யூவ் ச்ஹுவன்
- தேவ வார்த்தை நம்மில் நிலைத்திருக்கிறது – கனம் லோஹ் சோன் ச்ஹோய்
- நிலைத்திருப்பதில் வல்லமை – குமாரி கேரலின் போய்ன்
- எனது அன்பில் நிலைத்திரு – டாக்டர் ச்ஹான் ஆஹ் கீ





# என் இ சி எஃப்

## மலேசியா

**ஆயத்தம் செய்து தொகுத்தது**

**என் இ சி எஃப்மலேசியா**
32, Jalan SS2/103, Petaling Jaya
47300, Selangor Darul Ehsan, Malaysia
Tel:03-77278227 Fax:03-77291139
Email:prayer@necf.org.my
www.necf.org.my